Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை (19.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 353

## 642 ஏக்கர் விவசாய நிலங்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு



முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு பகுதியில் இராணுவம் மற்றும் விமானப்படை வசமிருந்த 642 ஏக்கர் விவசாய நிலங்கள், நேற்றையதினம் உத்தியோகபூர்வமாக விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் என்.ஏ. ஜே.சி.டயஸ், முல்லைத்தீவு, வாவெட்டி குளப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நாகலிங்கன் வேதநாயகன் முன்னிலையில் விவசாயிகளிடம் நிலங்களை

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலக்கை நோக்கி நகரும்வரை தமிழர்கள் தூங்கிவிடக்கூடாது

### அறிவுரை சொல்கிறார் மாவை

தமிழ் மக்களாகிய நாங்கள் யாரும் தூங்கிவிடக்கூடாது. எமது இலக்கை நோக்கி நகர வேண்டியது அவசியமாகும். நாங்கள் பாண்டவர்களைப் போன்றவர்கள். எங்களால் வெற்றிபெற முடியும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் எமது பிரதேசங்களில் எந்தவொரு வெற்றியையும் பெற முடியாமல் போனது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டமையை பாராட்டி, காங்கேசன்துறை தமிழரசுக் கட்சி அலுவலகத்தால் வழங்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,நாங்கள் பாண்டவர்களைப் போன்றவர்கள். ஏங்களால் வெற்றி பெற முடியும். அறம் பிழைப்போரே கஸ்ரங்களை அனுபவிப்பார்கள். தமிழ் மக்களாகிய நாங்கள் யாரும் தூங்கிவிடக் கூடாது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை பிரச்சினை தீராமைக்கு சர்வதேச நாடுகளே பொறுப்பு

## அமெரிக்கா தெரிவிப்பு

இலங்கை உட்பட்ட சில நாடுகளில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கு சர்வதேச சமூகமே பொறுப்பாகும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகளின் 27ஆவது அமர்வில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமெரிக்கா இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை உட்பட்ட சில நாடுகளில் உரிய செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தால் பல உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும் என்றும் அமெரிக்கா இதன்போது தெரிவித்துள்ளது. இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் விவகாரங்களில் சர்வதேச சமூகத்தின் தீர்மானங்கள் திருப்தியளிக்கவில்லை.


இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகளை தடுத்திருக்க முடியும் என்று குறிப்பிட்ட அமெரிக்கா, ருவண்டா, டார்பூர், சிரியா போன்ற நாடுகளிலும் இதே நிலையை காணக்கூடியதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

சில அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ளச் சாத்தியங்கள் காணப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும் மனித உரிமை மீறல்களை தடுக்க முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

## நாட்டிற்கு நன்மையான காலமாக அடுத்த இரண்டுவருடம் அமையாது

### என்கிறது ஜே.வி.பி.



அடுத்த இரண்டு வருடங்கள் நாட்டிற்கு நன்மையாக இருக்காது என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று மல்வத்து மாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரை சந்தித்து பேசிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## நிதி நியதி, முத்திரை வரிச்சட்டம். அனுமதியளித்தார் ஆளுநர்

வடமாகாண நிதி நியதிச்சட்டம் மற்றும் முத்திரை வரிச்சட்டத்திற்கான அனுமதியினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளதாக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் உறுதிப்படுத்தினார்.

இரு நியதிச்சட்டங்களுக்கான சட்டபூர்வ அனுமதி ஒப்புதலினை வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் வடமாகாண சபையில் வைத்து நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கையளித்துள்ளதாக அவர் கூறினார்.

வடமாகாண நிதி நியதிச் சட்டம் இல (01) -2014 மற்றும், வடமாகாண சபையின் முத்திரை வரி கைமாற்றுச் சட்டம் (02)-2014 ஆகிய இரண்டின் நியதிச் சட்டங்களுக்கான அனுமதிகளையே வடமாகாண ஆளுநர் வழங்கியுள்ளார்.

அந்த வகையில், இவ்விரு நியதிச்சட்டங்களும் நேற்று வியாழக்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண சபையின் அவைத்தலைவர் மேலும் கூறினார். (25)

## மின்கட்டணங்களை மேலும் குறைக்க திட்டம்

### அரசாங்கம் அறிவிப்பு

மின் கட்டணங்களை மேலும் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அமைச்சில் நேற்று பிற்பகல் நடைபெற்றபோது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் குறித்து கிளி.இல் 250 முறைப்பாடுகள்

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 250 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக, காணாமற்போனோர் தொடர்பான சாட்சியப்பதிவுகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளதாவது, எதிர்வரும் 27 தொடங்கி 30 ஆம் திகதிவரை கிளிநொச்சி

(19) ஆம் பக்கம் பார்க்க




## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசிய மில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

## பண்ணைப் பாலம் ஊடாக மின் விநியோக மார்க்கம் அமைப்பு



(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதிகளுக்கான மின்விநியோகம் மீளவும் யாழ். பண்ணை ஊர்காவற்றுறை வீதியூடாக இணைக்கப்படும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பண்ணை ஊர்காவற்றுறை வீதி புனரமைப்புப் பணிகள நடைபெற்றுவரும் அதேநிலையில் இவ் மின் இணைப்பு வேலைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்சமயம் தீவுப்பகுதிக்கான மின்சாரம் காரைநகர் பொன்னாலை வீதியூடான ஊர்காவற்றுறையூடாகவே விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (பா)

## ஊர்காவற்றுறையில் உட்கட்டமைப்பு; களநிலையில் விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரத் தேவைகள், மாணவர்களின் கல்வித்தேவைகள் போன்றனவற்றுடன் குடிநீர் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பன பற்றி ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரினால் (உதயன்) அண்மையில், கிராமந்தோறும் சென்று ஆராயப்பட்டதுடன் மக்களின் அன்றாட வாழ்வில் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் தொடக்கம உட்கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்துப் பிரச்சினைகள் போன்றவை தொடர்பாகவும் மக்களிடமிருந்து கருத்துப் பெறப்பட்டு அவை தொடர்பாக ஆராயப்பட்டது.

இவற்றுடன் குடிநீர் தேக்கி வைக்க வசதியற்ற கிராமங்களிற்கு குடிநீர்த் தாங்கி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி ஆய்வுக்கூட்டத்திற்காக முழுநாள் விஜயத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை அன்று மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் சுமார் பதினொரு இடங்களில் மக்கள் சந்திப்பினை மேற்கொண்டதுடன்



மக்களின் சுமுகமான வாழ்விற்குத் தேவையான வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கான வேலைத் திட்டங்களுக்குரிய நிதியினை நூறு மில்லியன் திட்டத்திலிருந்து ஒதுக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி மக்கள் நலன் ஆய்வுக்கலந்துரையாடலானது சேன்ஜேம்ஸ் கிராமம் (ஜே - 49) பருத்தியடைப்பு (ஜே - 50), கரம்பன் (ஜே-51) கரம்பன் கிழக்கு (ஜே - 52), ஒலிவில் வீதி இருதய ஆண்டவர் ஆலய மக்கள் , மெலிஞ்சிமுனை ஜே -54, நாராந்தனை, சின்னமடு (ஜே - 60) ,சூரியவத்தை (ஜே - 58) போன்ற கிராமங்களிலே இக் கலந்துரையாடல் நடைபெற்றதுடன் ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் பாடசாலைக்கு விஜயத்தினை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாடசாலை மைதானத்தை மாணவர்களின் பாவனைக்கேற்றவாறு புனரமைத்து தருவதாக தெரிவித்ததுடன் ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கும் விஜயம் மேற்கொண்டு குறைபாடுகளைக் கேட்டறிந்தார் நாடாளுமன்ற உறுப்பினரின் இவ்விஜயத்தினூடாக மக்கள் தமது குறைகளை எடுத்துக்கூறியதுடன் தமது கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

இக்கலந்துரையாடல்களின் போது ஊர்காவற்றுறை பிரதேச சபைத்தவிசாளர் ஜெயகாந்தன், உபதவிசாளர் மற்றும் குறித்த கிராமங்களின் கிராமஅலுவலகர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மண்டைதீவின் பொது மண்டபம்

மண்டைதீவுப் பகுதிக்கு கடற் தொழிலாளர்களுக்கான பொதுநோக்கு மண்டபம் ஒன்று ஐ.ஓ.எம்.நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் இந்த பொதுநோக்கு மண்டபம் ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் அமைதது்க்கொடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் மண்டைதீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர்கள் அங்கு அரசாங்கத்தினால் மீள் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)


### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3727)


## சிறுமி மீது பலாத்காரம் கைதானார் முதியவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 67 வயது முதியவர் ஒருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கைது செய்ததாக யாழ்ப்பாண பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

சிறுமியின் வீட்டிற்கு அருகில் வசிக்கும் மேற்படி முதியவர், சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக சிறுமியின் பெற்றோர்களால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து சந்தேகநபரான முதியவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சிறுமி வைத்திய பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பதிவுகளை உறுதிப்படுத்தக் கோரிக்கை

வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அலுவலகத்தில் கடந்த மாதம் பதிவுகளை மேற்கொண்ட பட்டதாரிகள் அனைவரும் எதிர்வரும் 30.09.2014 ஆம் திகதிக்கு முன் தமது அலுவலகத்தில் அவரவரது பதிவுகளை உறுதிப்படுத்துமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அலுவலக இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## ஆடு திருட்டு

நெடுந்தீவு, 4ஆம் வட்டாரம் எனும் விலாசத்தில் வசித்துவரும் தர்மலிங்கம் சசிதரன் என்பவர் கூலி வேலைகள் செய்து வருவதுடன் ஆடுகளும் வளர்த்து வந்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி காலையில் இரண்டு ஆடுகள் வெளியில் சென்றதாகவும் பிற்பகலில் ஒரு ஆடு மட்டும் திரும்பி வந்ததாகவும் மற்ற ஆட்டை யாரோ திருடி இருப்பதாகவும் நெடுந்தீவுப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். நெடுந்தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2564 திகதி 17-09-2014

ஆங்கில எழுத்து: L

வெற்றி எண்கள்: 04 38 48 63

போனஸ் இல: 13

ஜக்பொட் பரிசு ரூ.19,968,150/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 234082 | 20/- | 4,681,640/- |
| 2 இல | 16786 | 100/- | 1,678,600/- |
| 3 இல | 343 | 1,000/- | 343,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9389 | 40/- | 375,560/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 658 | 1,000/- | 658,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 19,968,150/- | - |
| 1 இல + போனஸ் இல | 11081 | 100/- | 1,108,100/- |
| 2 இல + போனஸ் இல | 515 | 500/- | 257,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 454 | 200/- | 90,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 273352 | | 11,884,700/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.09.20 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 20,607,075/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3504)


## "கூடி விளையாடு பாப்பா" சிறுவர் நாடக ஆற்றுகை



(யாழ்ப்பாணம்)

பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விசேட ஆற்றுகையாக கூடி விளையாடு பாப்பா நாடகம் நாளை மாலை 6.30 மணிக்கு நல்லூருக்கு அருகில் மேடையேற்றப்படுகின்றது.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் கூடி விளையாடு பாப்பா நாடகம் தே.தேவானந்தின் நெறியாள்கையில் மேடையேறி வருகின்றது.

நவீன மற்றும் பாரம்பரிய மேடைகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட புதிய மேடையில் சிறுவர்களின் உடல் உள ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு செயல் திறன் அரங்க இயக்கத்தினால் இந்த நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாளை நல்லூர் குறுக்கு வீதி, பாணன் குளத் தடியில் அமைக்கப்பட்ட புதிய நாடக மேடையில் மாலை 6.30 மணிக்கு மேடையேறுகின்றது. இந்த நாடகம் தொடர்ச்சியாக மாதத்தில் இரண்டு தடவைகள் சனிக்கிழமைகளில் மேடையேற்றப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சட்டத்துக்கு முரணாக செயற்பட்ட 13 வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

## த.வசந்தசேகரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த பதினைந்து நாட்களில் மட்டும் சட்டத்திற்கு முரணாக நடந்த 13 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டு 74,500 ரூபா தண்டம் விதித்துள்ளதாக யாழ்.மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

காலாவதியான நிறைகுறைந்த பொருட்களை விற்பனை செய்த 13 வர்த்தகர்களுக்கே இவ்வாறு தண்டம் விதிக் கப்பட்டுள்ளது. நிறை குறைந்த பாணை விற்பனை செய்த சுன்னாகம் பகுதி வர்த்தகர்கள் மீதே இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இனி வரும் காலத்தில் இவ்வாறு நிறை குறைந்த பாண் உற்பத்தி செய்யும் பேக்கரி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (4)

# மதுப்பழக்கத்திலிருந்து விடுதலை மல்லாவியில் பயிற்சிப்பட்டறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி சமுதாய ஆதரவு மையத்தினால் மதுவுக்கு அடிமையாகியுள்ள நோயாளர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை கடந்த திங்கட்கிழமை மல்லாவி சமுதாய ஆதரவு மையத்தில் இடம்பெற்றது.

இதில் உளவளத் துணையாளர் செல்வன் டானியல் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் குடிபோதைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து எவ்வாறு மீளுவது என்பது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இதில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலை உள நல வைத்தியர் த.விதுரன், முள்ளியவளை சமுதாய ஆதரவு மையத்தின் உளவள துணையாளர் ஆகியோர் கலந்து கொண்டு இது குறித்து விளக்கமளித்தனர். (104)

# பழுதடைந்த நிலையில் கைக்குண்டு மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை துண்ணாலை பகுதியில் உள்ள வயலில் இருந்து பழுதடைந்த கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வயலுக்கு சென்ற விவசாயி ஒருவர் கைக்குண்டு இருப்பதைக்கண்டு, 551 ஆவது படைப்பிரிவினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அந்த தகவலின் பிரகாரம் வயலுக்குச் சென்ற 551 ஆவது படைப்பிரிவு இராணுவத்தினர் கைக்குண்டை மீட்டுள்ளனர். (25)


# பெறுமதியான பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு 19 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த தினத்தன்று வீட்டில் எவரும் இல்லாததால் திருட்டு சாதுரியமாக இடம்பெற்றுள்ளதாகவும் மறுநாள் வீடு வந்து பார்த்த போது பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சீனப்பிரதமரின் வருகை






சீனப்பிரதமர் கொழும்புக்கு வந்திருக்கிறார். 'தீவுக்குள் ஒரு தீவு' எண்டு பெரிய அறிவிப்போட துறைமுகத்தோடு இணைந்த இன்னொரு நகரத்தீவாக புதிய திட்டமொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கு.

முன்னேற்றம் நடக்கிறது நல்லது.

இந்த மாதிரிப் புது விசயங்கள் நடக்கிறது அதையும் விட நல்லது.

இதுக்கு சீனா உதவி செய்யிறது எல்லாத்தையும் விட நல்லது.

ஆனால், இந்தச் செய்தி வந்த பத்திரிகையில சனங்கள் கடன் ஊசி ஏற்றப்பட்டு வாழ வதங்கிப்போற மாதிரியும் இன்னும் சீனாவிடம் இருந்து மகிந்தர் கடன் ஊசி–களை வாங்கிக்கொண்டு வலு கோலாகலமாக வாற மாதிரியும் ஒரு கேலிச்சித்திரம் வரையப்பட்டிருந்திது.

இலங்கையின்ரை சுதந்திரத்துக்கு முந்தியும் இப்பிடித்தான் நடந்திது.

அப்ப பிரிட்டிஸ்காரர் இலங்கையை தெருக்களாலும் புகையிரதப் பாதைகளாலும் தொடர்பாடல்களாலும் இணைத்தார்கள்.

தேயிலைத் தோட்டங்களையும் றப்பர் காடுகளையும் உண்டாக்கினார்கள்.

துறைமுகங்களை விருத்தி செய்தார்கள்.

பாடசாலைகளையும் நீதிமன்றங்களையும் கூட உருவாக்கினார்கள்.

தேவாலயங்களைப் பெரிசாகக் கட்டினார்கள்.

எல்லாம் எதுக்காக? அனைத்தும் யாருக்காக?

சோழியன் குடும்பி சும்மா ஆடுமா?

எல்லாம் அவர்களுக்காகவே...!

இலங்கை மக்கள் பிரிட்டிஸ் சட்டத்துக்கும் நிர்வாக விதிமுறைகளுக்கும் கடனுக்கும் வட்டிக்குமாக உழைத்துக் களைத்துக் கொண்டிருந்தார்கள்.

பிரிட்டிஸ்காரர்கள் போனாலும் நாங்கள் அந்நியருக்காக உழைக்கிற நிலைமை போய்விடேல்ல.

இன்னும் நாங்கள் பிறத்தியாருக்காகவே உழைக்கிறம். பிறத்தியாரின் உதவிகளை எதிர்பார்க்கிறம். பிறத்தியாரையே பெரிய ஆட்களாகப் பார்க்கிறம். பிறத்தியாரையே அரசியற் தீர்வுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறம்.

அது என்னவோ தெரியேல்ல, 'இம்போர்ட்டன்ற் அயிற்றங்களுக்கு' (இறக்குமதி செய்யப்பட்ட விசயங்களுக்கு) எங்கட சனங்களிட்ட நல்ல மரியாதையும் வரவேற்பும் இருக்கு.

அது கடனாக இருக்கலாம். உயிரைக்குடிக்கிற பொலிடோலாக இருக்கலாம்.

சீனாப்பிரதமர் வந்து மனங்குளிர்ந்து நாலு நல்ல விசயங்களைச் செய்கிறார்.

நல்லது. நாங்கள் சீனாவுக்காக இன்னும் எவ்வளவு காலத்துக்கு உழைக்கப்போறம் எண்டதை ஆராவது கொஞ்சம் விளங்கப்படுத்திச் சொன்னால் உதவியாக இருக்கும்.

போரால அழிஞ்சு போன நாட்டைக் கட்டியெழுப்ப நாலு பேற்ற உதவிகள் தேவை.

அமெரிக்கக்காரன் உதவி எண்ட பேரில மூக்கை நுழைச்சு முழு வீட்டையும் பிடிக்கலாம். சீனாக்காரன் பத்திப்பக்கத்தால மூக்கை நுழைச்சால்தான் பிரச்சினையா எண்டு ஒரு நண்பர் கொதிக்கிறார்.

நான் என்ன செய்ய?

ஆரும் எங்களை வைச்சுப் பிழைக்கிற நிலைமையில நாங்கள் இருந்தால் அமெரிக்கக்காரன் எண்டால் என்ன, இந்தியன் எண்டால் என்ன, சீனாக்காரன் எண்டால் என்ன இதுதான் நடக்கும்.

இதில தனிய அவர்களை மட்டும் நாங்கள் கோவிக்கேலாது.

நாங்கள்தான் எங்கட முகத்தையும் முதுகையும் பழுதாக்கிக் கொண்டிருக்கிறம்.

இதை மாத்திறதைப் பற்றி நாங்கள் யோசிக்காமல் விட்டுப்போட்டு, சீனா பிழை, அமெரிக்கா பிழை, இந்தியா பிழை, பிரித்தானியா பிழை எண்டு சொல்லிக்கொண்டிருக்கிறதில அர்த்தமில்லை.

நல்லவை நடக்கட்டும். பொல்லாதவை தடுக்கப்பட்டும் எண்டு விழிப்பாக இருந்து கவனிச்சுக் கொள்ளுவம்.

நல்ல வேளை சீனப்பிரதமரிட்டை ஆரும்போய் அழுது வடியேல்ல. ஆயர்மார், அரசியல்வாதிகள் எண்டு ஒரு அணிவகுப்பும் நடக்கேல்ல.

வாழ்க சீனப்பிரதமரே.... முந்தி நாங்கள் சீனப்பட்டை வாங்கினம். சீன வெடியை வாங்கிக் கொளுத்தினம். சீனப் பீங்கான் பாத்திரங்களை வீடுகளில் வைச்சிருந்தம்.

அப்பிடி ஒரு மகிழ்ச்சியை நாங்கள் பெறக்கூடிய மாதிரி ஏதாவது செய்யுங்கள். முதுகு முறியிற மாதிரியான காரியங்களைத் தயவு செய்து பாத்திடாதேங்கோ...

சந்தர்ப்பங்கள் நிறையப் பேரைக் கூப்பிடுகின்றன. ஆனால் சிலர்தான் எழுந்து நிற்கிறார்கள்.

- ஆலிவர் வோர் போர்ட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## புறக்கணிப்பும் மற்றும் புறணியும்

இலங்கை அரசியலில் எண்பது வருடங்களுக்கும் மேலாக தமிழர்களாகிய நாம் புறக்கணிப்பு அரசியலையே தெரிவுசெய்து நடத்தி வருவதன் மூலம் நஷ்டங்களையும் சிக்கல்களையும் பெற்றுக்கொள்வது பற்றி எஸ்.சிவதாசன் அவர்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒருசில சந்தர்ப்பங்களில் தவிர பெரும்பாலும் இலங்கையின் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் பெறுவதைப் புறக்கணித்தே வந்ததன் மூலம் தமிழ் மக்களுக்கான பல வாய்ப்புகள் இத்தலைவர்களால் வலிந்தே இழக்கப்பட்டு வந்திருப்பதை நமக்கு இன்றுள்ள பட்டறிவிலிருந்து நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

1960களில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 10 அங்கத்துவ மந்திரி சபையில், ஒரு புதிய ஆரம்பத்தை ஏற்படுத்துவதற்காக தமிழர் பகுதிக்கு 4 இருக்கைகள் ஒதுக்கப் பட்டிருந்தது. எதிர்ப்பு வரக்கூடும் என்று அஞ்சி தமிழ் தரப்பின் அதற்கான பதில் நிராகரிப்பாகவே இருந்ததை கட்டுரையாளர் சுட்டிக் காட்டுகிறார்.

ஆனால் முஸ்லிம்கள் தங்கள் விவேகத்தை நிரூபித்தனர். மந்திரி சபையில் இணைந்துகொண்ட முஸ்லிம் கல்வி அமைச்சர் தனது சமூகம் பல வருடங்களுக்கு பின்னர் உயர்ந்த நிலையை அடைய அடித்தளம் அமைத்தார், சிறிமா அரசாங்கத்தின் 1960 முதல் 65 வரையும், இரண்டாவது முறை பதவியேற்ற 1970 முதல் 77 வரையான காலத்திலும். அதன் வழியே முஸ்லிம் சமூகம் இமாலய உயரத்துக்கு எழுந்தது என்பதை கட்டுரை குறிப்பிடுகிறது.

தமிழர்களாகிய நாங்களோ எங்கள் புகார்ப் பட்டியலைத் தொடர்ந்து தயாரிப்பதுடன் எங்கள் குறைகள் பற்றிப் பாடும் பல்லவியை மெருகேற்றியும் வருகிறோம். வன்முறை அச்சுறுத்தல் போன்ற எதிர்மறையான செயற்பாடுகள் மூலம் சமூகம் நஷ்டமடையும் பாதையையே தெரிவுசெய்தோம் என்றும் விளக்குகிறது கட்டுரை.

கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களும் சமூகம் சார்ந்த இந்த விவேகம் பற்றி தனது நேர்காணல் ஒன்றில் தெளிவாகச்சொல்கிறார். அதைப் படிக்கையில் முஸ்லிம்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகளோடு தமிழ்ப் புத்திஜீவிகளை (யாரேனும் உள்ளனரா என்ன?) ஒப்பிட்டுப் பார்த்து விசனத்திற்குள்ளாகுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பேராசிரியர் அனஸ் சொல்கிறார் – "ஒரு சிறிய சம்பவத்தை புத்தியீனமாக உருவாக்க நாமே காரணமாகயிருப்பது அநியாயமாகும். இனவாதத் தீப்பொறி பரவிச் சூழல் மோசமடைந்துள்ள நிலையில் எங்களது போக்குகள், நடவடிக்கைகள் அதற்குத் தூபமிடுவதாக அமைய வேண்டியதில்லை. ஏனெனில் இது முஸ்லிம் சமூகத்தின் அல்லது ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் முன்னேற்றத்தையும் இருப்பையும் பற்றிய பிரச்சினையாகும்.

நுட்பமாகவும் புத்திக்கூர்மையாகவும் செயல்படுவதன் மூலமும் நல்லிணக்கத்திற்கான உச்சகட்ட வாய்ப்புகளை பெருமனதோடு ஏற்றுச்செயற்படுவதன் மூலமும் நாம் இந்த இனவாத அனல் பொறியை தணிவிக்க முடியும். இது எமது 1000 வருடத்திற்கு மேற்பட்ட வரலாற்றில் நிரூபணமான விடயமாகும்.

ஏன் இதுவரை நடந்த 30 கலவரங்கள், 300 கலவரங்களாக ஒரு நூற்றாண்டுக்குள் விரிவுபடவில்லை? இந்தக் கேள்வி முக்கியமானது. ஆவேசத்தினாலும் புத்திக்கூர்மையற்ற அவசர செயற்பாடுகளினாலும் எமது தரப்பினால் ஏற்படும் தவறுகள் தடுக்கப்பட வேண்டும்..."

இவ்வாறு தன் சமூகத்தைப் பாதுகாக்கும் வகையிலான கருத்துக்களை தெளிவாகவும் துணிச்சலோடும் சொல்லிச் செல்கிறார் அனஸ். இதுபோன்று சமூகம் சார்ந்து சிந்தித்து, அக்கறையோடு வழிநடத்தும் சிந்தனையாளர்கள் இல்லாததன் விளைவே தமிழர்களுக்கு இந்த நிலை என்பதை உணர வைக்கிறார் பேராசிரியர்.

அரச வன்மத்தையும், விவேகமற்ற மூர்க்கத்தனத்தையும், இனவாதிகளாகச் சிந்திப்பதால் வரும் ஒருபக்கத்து ஆதங்கங்களையுமே எழுத்துக்களாகவும் பேச்சுக்களாகவும் வெளித்தள்ளிக் கொண்டிருக்கும் எம்மவரின் வீண் புலம்பல்கள் முடிவுக்கு வருவது எப்போது?

- ஆசிரியர்

# முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வு நாளை

மன்னார் மாதோட்டத்தில் உருவான முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வுகள் நாளை மாலை 6.45மணிக்கு முருங்கன் கமம் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் நடைபெற இருக்கின்றது. முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றமானது கலாபூசண, ஆளுநர், சாகித்ய, தலைக்கோல், நாடகக்கீர்த்தி போன்ற விருதுகளைப் பெற்ற நாடறிந்த நாடகக் கலைஞர் கலைத்தவசி குழந்தை செபமாலை ஆசிரியரால் 1964ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பொன்விழா நிகழ்வில் கலைநிகழ்வுகள், கலைஞர்கள் கௌரவிப்பு, பொன்விழா மலர் வெளியீடு போன்றவை சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெற இருக்கின்றன. கலைநிகழ்வுகளாக மன்றத்தின் குழந்தைக் கலைஞர்களால் 'யார் குழந்தை' என்ற நாட்டுக்கூத்தும், ஆளுநர் செயலகத்தால் இவ்வாண்டு நடத்தப்பட்ட சுதேச கூத்துவழி நடனப்போட்டியில் முதலிடத்தைப் பெற்ற கூத்துநடனமும், மன்றத்தின் இளையோரால் மேடையேற்றப்படும் 'வீரத்தாய்' நாட்டுக்கூத்தும், நானாட்டான் ஆவணத்தைச் சேர்ந்த கார்மேல் அன்னை கலாமன்றத்தினரால் ஆளுநர் செயலகத்தால் இவ்வாண்டு 2014இல் நடத்தப்பட்ட நாட்டுக்கூத்துப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று மேடையேறும் 'பாஞ்சாலி சபதம்' ஆகிய நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன. மேலும், 'நாம்' என்ற பொன்விழா சிறப்பு மலரும் வெளியிடப்பட இருக்கின்றது. இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக, கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப), கலாநிதி தமிழ்மணி அகளங்கன், கலாநிதி த.கலாமணி, கலாநிதி க.சிறிகணேசன், மன்னார் கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியான், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டி மெல், வைத்திய கலாநிதிகளான வெற்றிநாதன் லெம்பேட், எஸ்.பிரன்னா, மற்றும் கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.சிவசக்தி ஆனந்தன், எஸ்.வினோநோகராதலிங்கம், ஏ.செல்வம் அடைக்கலநாதன், நானாட்டான் பிரதேசசபைத் தலைவர் ஏ.ரீ.அன்புராஜ் லெம்பட் போன்றோர் பங்கேற்க உள்ளனர்.

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தில் நீண்டகாலமாக கலைஞர்களாகக் கலைத் தொண்டு புரிந்தவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெறுகின்ற அதேவேளையில் மன்னார் மாதோட்டத்தில் கலைத்தொண்டு, தமிழ்த் தொண்டு, சமூகத் தொண்டு புரிந்துவருகின்ற ஆறு கலைஞர்களுக்கு மன்றத்தினால் கௌரவிப்பும் இடம்பெற இருக்கின்றது. அந்த வகையில் ஆத்திக்குளியைச் சேர்ந்த கவிஞர் கலாபூசணம் அ.அந்தோனிப்பிள்ளைக்கு 'பிள்ளைத் தமிழோன்' என்றும், காத்தான்குளத்தைச் சேர்ந்த திருமதி வசந்தி சுவாந்தகுரூஸுக்கு 'அரங்கச் செல்வி' எனவும், பேசாலையைச் சேர்ந்த S.A.உதயனுக்கு 'நாவல் நாயகன்' எனவும், ஆட் காட்டிவழியைச் சேர்ந்த பி.எம். செபமாலைக்கு 'ஆய்வறித் தலைமகன்' எனவும், இசைமாலைத்தாழ்வைச் சேர்ந்த செபமாலை பிலிப்பு (சிங்கராசா) விற்கு 'சுடர் கலைச் சோதி' எனவும்,முருங்கனைச் சேர்ந்த மரிசால் பேதுரு (பீற்றர்)விற்கு 'ஞானக் கதிரொழி' எனவும் கௌரவப் பட்டங்கள் கொடுக்கப்பட இருக்கின்றன. இவ்விழாவில் அனைவரும் கலந்து நான்கு குறுநேர நாட்டுக்கூத்துக் களைக் கண்டுகளிக்க முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்கள்.

# மாதாந்த பட்டியலின்படியே மின்சாரக் கட்டணம் குறைப்பு

## மின்சக்தி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

மாதாந்தம் பெறப்படும் கட்டணப் பட்டியலின் அடிப்படையிலேயே 25 வீத மின்சாரக் கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் டப்ள்யூ.பி. கனேகல தெரிவித்துள்ளார்.

தற்போது மின்சாரக் கட்டணம், நிலையான கட்டணம் மற்றும் எரிபொருளுக்கு செலவாகும் கட்டணம் போன்றவற்றை உள்ளடக்கியே தயாரிக்கப்படுகின்றது.

இது ஒவ்வொருவருக்கும் வேறுபடும். எது எவ்வாறிருப்பினும் மின்சாரக் கட்டணம் புதிய முறைப்படி அனைவருக்கும் 25 வீதம் குறைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

உதாரணமாக 100 ரூபா மின் கட்டணமாக விதிக்கப்படும் ஒருவருக்கு நூற்றுக்கு 25 வீதம் குறைக்கப்பட்டு 75 ரூபா கட்டணமாக அறவிடப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் தற்போது வழங்கப்படும் கட்டணப் பட்டியல்களில் இந்த புதிய முறை இருக்காது எனவும், புதிய கட்டண முறையை அமுல்படுத்த இரண்டு வாரங்கள் ஆகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் விரைவில் உதயமாகிறது "புகையிரத நகரம்"

நகர அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை புகையிரத திணைக்களத்தால் யாழ். புகையிரத் நிலையத்தில் 8.5 ஏக்கர் நிலப்பரப்பில் புகையிரத நகரம் அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண புகையிரத நிலையத்தின் வடக்குப் பக்கமாகவுள்ள ஸ்ரான்லி வீதி, தெற்குப் பக்கமாகவுள்ள யாழ்.புகையிரத நிலைய வீதி, கிழக்குப்பக்கமாகவுள்ள இராசாவின் தோட்ட வீதி, மேற்குப் பக்கமாகவுள்ள வைத்திலிங்கம் வீதியையும் இணைத்து இந்த புகையிரத நகரம் அமைக்கப்படவுள்ளது.

இந்த புகையிரத நகரத்தில், வணிக அபிவிருத்தி, உள்ளக அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் பொதுமக்களுக்கு தேவையான தொடர்பாடல் வசதிகள், ரயில் பணியாளர்களுக்கான விடுதிகள், பேருந்து, வாகன தரிப்பிடங்கள், நவீன வசதிகளுடனான விடுதிகள் போன்றவையும் அமைக்கப்படவிருக்கின்றன.

மேற்படி நகர அபிவிருத்திக்கான நிதி எவ்வளவு என்பது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபை தீர்மானிக்கவில்லை.ஆலோசனைகள் பெறும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றதும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

மேலும், சுற்றுலா பயணிகளை கவரும் பொருட்டு, புல்லுக்குளத்துக்கும் யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் இடையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 6 மில்லியன் ரூபா நிதியுதவியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் பச்சை வீடு ஒன்றும அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வந்தது துரதிர்ஷ்டம்

(கம்பஹா)

அதிர்ஷ்ட இலாபச்சீட்டை போலியான முறையில் அச்சடித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெப்பிலியானவில் வைத்தே அவர், கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்த கணனி மற்றும் அச்சடிக்கும் இயந்திரம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதாகவும் கம்பஹா விசேட விசாரணைப்பிரிவு அறிவித்துள்ளது. அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு பெறுபேறுகள் தொலைக்காட்சியில் வெளியானதன் பின்னர், 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இலக்கங்களை அவர், போலியான முறையில் அச்சடித்து இலாபச் சீட்டு விற்பனை பிரதிநிதியிடம் கொடுத்து பணம் பெற்றுக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

"பல ஆண்டுகளுக்கும் மேலாக, துப்பாக்கியின் நீண்டதொரு நிழலின்கீழ், எந்தவிதமான அர்த்தமோ நோக்கமோ இல்லாமல், சகல முனைகளிலிருந்தும் எழும் வன்முறைகளின் ஆதிக்கத்திலிருந்து நம் குழந்தைகளைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மிகுந்த ஆதங்கத்துடன் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இன்னொரு பக்கத்தில் ஒதுங்கி நின்று இவை எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு வாழ்கின்ற மக்களின் முகங்களையும் நாம் பார்க்க முடிகின்றது.

இன்றைய சூழ்நிலையில் தெளிவாகச் சிந்தித்து ஆராய்வதென்பது நோய்வாய்ப்பட்ட நேரத்தில் நாங்கள் மேற்கொள்ளும் செயற்பாட்டை ஒத்ததாக இருக்கின்றது. எப்போதெல்லாம் நாம் எழுத நினைக்கிறோமோ அப்போதெல்லாம் இந்த யதார்த்தத்திற்குள் நாமும் புதைந்துபோய் விடுகின்றோம். புத்தி சுவாதீனத்தை இழந்து, எந்தவிதமான எதிர்ப்புணர்வுமின்றி, இந்தப் பயங்கரவாத, வன்முறைப் புதைகுழிக்குள் சமூகம் மூழ்கி அமிழ்ந்துவிட்டது என்றும் நாம் அஞ்சுகின்றோம்.

மனித ஆளுமைகள், ஆற்றல்களை எல்லாம் பறிகொடுத்துவிட்ட நிலைமையில் நமது சமூகம் இருக்கிறது... ஒதுங்கிப்போய் அமிழ்ந்து கொண்டிருக்கும் எமது சமூகத்திற்கு மீண்டும் புத்துயிரூட்ட சில வழிவகைகளைத் தேடுவதும், புறநிலை நோக்கும், விமர்சனபூர்வமான நேர்மையான நிலைப்பாடுகளை எடுத்து விளக்குவதும் இன்று மிக அவசியமாக உள்ளன. இதற்கு விலையாக எம்மில் சிலரின் உயிரும் பறிபோகலாம். இதனை விட்டால் நமது சமூகத்திற்கு வேறு மார்க்கமில்லை என்றரீதியிலேயே நாம் இதைக் கைக்கொண்டுள்ளோம்......"

- ராஜனி திராணகம - 1988 முறிந்த பனை (சில மாற்றங்களோடு)



### ராஜினி திராணகம 25வருட நினைவு தினம்

# சுதந்திரமாக சிந்திப்போம்

தமிழ் சமுதாயத்தைப் பற்றி அன்று ராஜனி எழுதிய கருத்துக்களும் அவதானிப்புக்களும் இன்றைய எமது நிலைமைக்கு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றன. இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து மீண்டு, தமிழ் சமுதாயம் திரும்பவும் தலை தூக்குவதாயின் ஒரு சிலராவது சுதந்திரமாக சிந்திக்க தொடங்கவேண்டும், எல்லோரும் சிந்திக்கக் கூடிய ஒரு வாய்ப்பை, ஒரு வெளியை உருவாக்க வேண்டும்.

தமிழ் சமூகத்தின் தற்போதைய சிந்திக்கும் தன்மையை நோக்கினால், அது ஒரேவிதமாக, தனக்கு மிகவும் பரிச்சயமான, தனக்குப் பாதுகாப்பானது எனத் தான் கருதும் வழிகளில் தடம் மாறி, மிகவும் குறுகிய வட்டத்தினுள்ளே அகப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

மாற்றுக் கருத்துக்களோ, புரட்சிகரமான சிந்தனைகளோ, ஆரோக்கியமான கற்பனைகளோ, சுபீட்சமான எதிர்கால எண்ணக்கருக்களோ இல்லாது எமது சமூகம் காலத்துள் சிக்குண்டு, முழுமையாக உடைந்து போய்த் தோற்கடிக்கப்பட்ட நிலையில் கிடக்கின்றது.

"அடக்கப்படுபவரின் மனம்தான் அடக்குமுறையாளர்களின் கையில் உள்ள பலமான ஆயுதம்" என்கிறார் ஸ்ரீபன் பிக்கோ. (Stephen BikO)

ராஜனி திராணகமவும் தென்னாபிரிக்க கறுப்பின விடுதலைக்குப் போராடி உயிர்நீத்த ஸ்ரீபன் பிக்கோ போல் தனது மக்களை, இவ்வாறான குறுகிய சிந்தனை போக்கில் இருந்து விடுவிப்பதற்காகப் போராடி தனது உயிரையும் அதற்காகத் தியாகம் செய்த பெண் மணியாகத் திகழ்கின்றார்.

ராஜினியின் பரந்த சிந்தனைகளும், எழுத்துக்களும், ஆக்கங்களும், செயற்பாடுகளும் அப்பொழுது அதிகாரத்தில் இருந்தவர்களுக்கும் அதற்காகப் போட்டியிட்டவர்களுக்கும் சகித்துக் கொள்ள முடியாதவொன்றாக இருந்தது.

ஆரம்பத்தில் ராஜனி இடதுசாரி மார்க்ஸியக் கோட்பாடுகளை ஆழமாகப் படித்து ஆராய்ந்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச இடதுசாரி இயக்கங்களுடனும், அமைப்புக்களுடனும், குழுக்களுடனும் நெருங்கிய தொடர்புகளை வளர்த்து, அவர்களுடன் கூடிச் செயற்பட்டதன் மூலம் ஆயுதப்போராட்டத்தின் தேவையை ஏற்றுக்கொண்டார்.

ஆயினும் காலப்போக்கில் ஏற்பட்ட உள முதிர்ச்சியினாலும், இயக்கங்களுடனான நெருங்கிய நேரடிச் செயற்பாடுகளினால் ஏற்பட்ட அனுபவங்களாலும், முக்கியமாக இலங்கைத் தமிழ் இயக்கங்களின் இடையே எழுந்த உட்பூசல்கள், சகோதரப்படுகொலைகள், கருத்துவேறுபாடுகள், மோதல்கள் முதலியனவற்றாலும் ஏமாற்றத்திற்கு உள்ளாகி, ஆயுதப் போராட்டத்தின் ஆபத்துக்களையும் நீண்டகால விளைவுகளையும் நன்குணர்ந்து கொண்டார்.

அதன் காரணமாக ஆயுதப்போராட்ட அணுகுமுறையை நிராகரித்து, அதனிலிருந்து விலகி நடந்து கொள்ள முயற்சித்தார்.

ஆயினும் அவர் தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்டுப் பணியாற்றினார். இதற்காக அவர் தான் வாழ்ந்த பாதுகாப்பான வெளிநாட்டுச் சூழலில் இருந்து இங்கு வந்து, தனது சொந்தக் குடும்ப நலன்களையம் கவனிக்காமல், இரவு பகலாக ஒடுக்கப்பட்ட, மக்களுக்காகப் பணியாற்றினார்.

அக்காலப் பகுதியில் இருந்த போர், ஊரடங்கு போன்ற பயங்கரமான சூழ்நிலைமைகளின் போதும் சைக்கிளில் சென்று, விதவைகள், தாய்மார், ஒடுக்கப்பட்ட மக்கள், மாணவர்கள் என்று உதவி தேவைப்படுவோரைத் தேடிப்போய்ச் சந்தித்து, கவலைகளைப் பகிர்ந்து, பிரச்சினைகளைச் சவால்களை எதிர்கொள்ளும் வழிகள் பற்றி அவர்களோடு கலந்துரையாடி அவர்களுக்குத் தேவையான மனஉறுதியை அளித்தார். அவர்களின் தேவைகளுக்காகவும், நீதிக்காகவும் அதிகாரிகளுடன் கையில் ஆயுதங்கள் இன்றி போராடினார்.

இவ்வாறாக பொதுமக்களை முதன்மைப்படுத்தும் சமூக உருவாக்கத்திற்காக, ஒடுக்கப்பட்ட சிந்தனைகளுக்குள் இருந்து மக்களை விடுவிக்கும் செயற்பாடுகளைத் தனித்த ஒரு பெண்ணாக நின்று துணிச்சலுடன் அவர் மேற்கொண்டதை, அப்பொழுதிருந்த அதிகார வர்க்ககங்களினால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

ராஜனி அப்பொழுது எழுதிய கருத்துக்களும், எடுத்த நிலைப்பாடுகளும், முன்வைத்த விமர்சனங்களும், நடாத்திய ஆய்வுகளும் எவ்வளவு தூரம் உண்மையான தீர்க்கதரிசனம் கொண்டவை என்பது இப்பொழுது புலனாகின்றது. நாம் இப்போது இருக்கும் நிலைமையைச் சற்று அவதானித்து, ஆராய்ந்து பார்த்தால், இன்றைய எமது நிலையானது அன்றிருந்த அந்தக் காலகட்டத்துடன் எவ்வளவிற்குப் பொருந்திநிற்கின்றது என்பதைக் கண்டுகொள்ளலாம்.

இன்று எம்முடன் அவர் இருந்திருப்பின் எமது இக்கட்டான இந்தத் தருணத்தில் சமூகத்திற்குத் தகுந்த வழிகாட்டியாகவும், அருமையான தலைமைத்துவப் பண்பைக் கொண்டவராகவும் அவர் திகழ்ந்திருப்பார். துரதிஷ்டவசமாக, அக்காலத்து இளைஞர் களும், தலைவர்களும் அவரின் எச்சரிக்கைகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் மனநிலையில் இருக்கவில்லை.

ஆயுத மோதல்களும், இறப்புக்களும், இழப்புக்களும் ஓய்ந்து போயிருக்கின்ற இக்காலகட்டத்திலும் நாம் இனவாதத்துள்ளும், துவேசத்துள்ளும், பகைமையினுள்ளும், குரோத மன நிலை யினுள்ளும் அகப்பட்டுக்கொண்டு, குறுகிய சிந்தனையுடன் கூடிய பார்வையைக் கொண்டவர்களாகவே இருக்கின்றோம்.

ஆயினும் இத்தகைய இயல்பினை குரோத மனநிலையினை எம்முள்ளே வைத்துக்கொண்டு, வெளியில் அதிகாரத்தில் உள்ளவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று நடக்கும் பணிவும் அடக்கமும் நிறைந்தவர்களாக, "இரட்டைவேடத்தன்மை" உடையவர்களாக வாழ்ந்து வருகின்றோம். W.E.B. Dubois என்ற கறுப்பின அமெரிக்க எழுத்தாளர் கூறுவது போல, நாம் "இரட்டைப் பிரக்ஞை" உடையவர்களாக இருக்கின்றோம்.

தெரிந்தோ, தெரியாமலோ அரசியல்வாதிகளும், ஊடகங்களும் தமது தனிப்பட்ட நலன்களுக்கு எம்மைப் பயன்படுத்துவதற்காக இனவாத உணர்வுகளைத் தூண்டி, அவற்றை வளர்த்து, பேணிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய தோற்றப்பாடுகளும், மன நிலைகளும், சிந்தனைகளும் நீடிப்பதற்கு அரச பயங்கரவாத வன்முறைகளும், பாகுபாடுகளும், துணைபோகின்றன என்பது மறுப்பதற்கு இல்லை.

ஆயினும் நாம் இக்காலத்துச் சிக்கல்களிலிருந்து, முட்டுக்கட்டைகளில் இருந்து தப்புவதாயின், ஒரு சுபீட்சமான எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதாயின், எமது மனப் பிரக்ஞைகளை மேம்படுத்தி விடுதலை பெறுவதாயின், நாம் இவ்வாறான குறுகிய இனவாதக் கோட்பாடுகளில் இருந்து விடுபட்டுப் பரந்த சிந்தனைத் தடத்தினை நோக்கி எம் கால்களைத் திருப்ப வேண்டும்.

தமிழ்ச் சமூகம் முன்னேறுவதற்கும், அபிவிருத்தியடைவதற்கும் இவ்வாறான பிற்போக்கான சிந்தனைகளுக்கும் சக்திகளுக்கும் இடம் கொடுக்காமல் பரந்த மனிதநேய குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ராஜினி போன்ற இந்தத் தளத்தில் சிந்திப்பவர்களைச், செயற்படுவர்களை எல்லோரும் மதித்து அவர்களை முன்னுதாரணமாக எடுத்தோமானால் காலப் போக்கில் எமக்கும் அது நன்மை பயக்கும்.

## பேராசிரியர் தயா சோமசுந்தரம் கட்டுரையிலிருந்து

ஆயினும் சுதந்திரமாகச் சிந்தித்தல், புதிய யோசனைகளின் தோற்றம், மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தல், ஆரோக்கியமான காழ்ப்புணர்வில்லாத வகையிலான பிரதிவாதங்கள், கருத்து வேறுபாடுகளைச் சகித்துக் கொள்ளல், ஒருங்கிணைந்த பரிணாம உருவாக்கங்கள் போன்றனவே ஒரு சமூகத்தின் இயல்பான உயிர்த்துடிப்பை, ஆரோக்கிய இயக்கப்பாட்டை, அதன் எதிர்கால வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன.

எமது வரலாற்றை நாம் திரும்பிப் பார்ப்போமானால் தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைப்போக்கானது இவ்வாறு ஒரு குறுகிய வட்டத்தினுள்ளே எப்பொழுதும் முடங்கிக்கிடக்கவில்லை என்பது தெளிவாகிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முழக்கத்தின் ஊடாகவும், சைவ சமயத்தில் மட்டுமல்லாமல் புத்த, சமண, சாக்த, வைஷ்ணவ மற்றும் அண்மைக் காலத்தில் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களிலும் முழு நம்பிக்கையுடன் ஈடுபாடுகாட்டி, அனுபூதிமான்களாக மதிக்கப்பட்ட பெரியார்களின் மூலமாகவும், மார்க்ஸிய இடதுசாரிச் சிந்தனை, விஞ்ஞானத்துறை போன்றவற்றில் வல்லுநர்களாக திகழ்ந்தவர்களூடாகவும் தமிழ்ச் சமூகம் தனது பரந்துபட்ட சிந்தனைப் போக்கை வெளிக்காட்டி இருந்தது.

ஆயினும் அதே சமூகம் தனக்கு நேர்ந்த பல கசப்பான நிகழ்வுகளாலும், தன்னைத்தானே அடக்கி அழித்ததாலும் தற்பொழுது ஒரு கிணற்றுத்தவளையின் நிலைக்கு தன்னைக் கொணர்ந்துள்ளது.

**தெரிந்தோ, தெரியாமலோ அரசியல்வாதிகளும், ஊடகங்களும் தமது தனிப்பட்ட நலன்களுக்கு எம்மைப் பயன்படுத்துவதற்காக இனவாத உணர்வுகளைத் தூண்டி, அவற்றை வளர்த்து, பேணிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய தோற்றப்பாடுகளும், மனநிலைகளும், சிந்தனைகளும் நீடிப்பதற்கு அரச பயங்கரவாத வன்முறைகளும், பாகுபாடுகளும், துணைபோகின்றன என்பது மறுப்பதற்கு இல்லை. ஆயினும் நாம் இக்காலத்துச் சிக்கல்களிலிருந்து, முட்டுக்கட்டைகளில் இருந்து தப்புவதாயின், ஒரு சுபீட்சமான எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதாயின், எமது மனப் பிரக்ஞைகளை மேம்படுத்தி விடுதலை பெறுவதாயின், நாம் இவ்வாறான குறுகிய இனவாதக் கோட்பாடுகளில் இருந்து விடுபட்டுப் பரந்த சிந்தனைத் தடத்தினை நோக்கி எம் கால்களைத் திருப்ப வேண்டும்.**

# அளுத்கம புனரமைப்பு தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை




அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகர் பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட, சேதமடைந்த வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களை புனரமைக்கும் பணிகள் தரமான முறையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே புனரமைப்பு தொடர்பிலும் அதன் தரம் தொடர்பிலும் எவரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என மேற்கு பிராந்திய பாதுகாப்பு படைகளின கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புனரமைக்கப்பட்ட 112 வீடுகள் மற்றும் 33 வர்த்தக நிலையங்கள ஆகியன இதுவரை உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் 99 வீடுகள் மற்றும் 30 வர்த்தக நிலையங்கள் புனரமைக்கப்படுகின்றன.

மேற்படி புனரமைப்பு பணிகளில் முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த 697 பேர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களில் இராணுவத்தைச் சேர்ந்த 420 பேரும், கடற்படையைச் சேர்ந்த 134 பேரும், விமானப் படையைச் சேர்ந்த 110 பேரும், சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த 33 பேரும் அடங்குவர்.

பொறியிலாளர்கள் மற்றும் களநில அதிகாரிகள் இந்த புனரமைப்பு பணிகளை பார்வையிட்டு வருவதுடன் தரமான முறையில் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றனவா என்பனவற்றை கண்காணிக்கும் பொருட்டு தனியாக விஷேட சுயாதீன குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மொத்தமாக 211 வீடுகளும்- 82 வர்த்தக நிலையங்களுமே சேதமடைந்ததாக அடையாளங் காணப்பட்டன.

இவ்வாறு புனரமைக்கப்பட்ட வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிக்கும் போது குறித்த வீட்டை புனரமைப்பதற்கான மதிப்பிடப்பட்ட தொகை, புனரமைக்க எடுக்கப்பட்ட காலம், உள்ளடக்கப்பட்ட பொருட்கள் மற்றும் அவற்றின் தரம் தொடர்பில் கடிதம் ஒன்று உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டு அவர்களது கையொப்பம் பெறப்படும்.

இதேவேளை, புனரமைப்பு பணிகளை ஒரிரு மாதங்களில் முடித்துவிடலாம் என எதிர்பார்த்த போதிலும் சில வர்த்தக நிலையங்களின் பாதிப்புக்கள், தரம் தொடர்பில் ஆய்வறிக்கை பெறவேண்டிய நிலை ஏற்படடது இதற்கமைய ஒரு கட்டடம் தொடர்பில் மாத்திரம் 21 வகையான பரிசோதனைகள் மேற கொள்ளப்படுகிறது.

இதற்கென சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அந்த வர்த்தக நிலையத்தின் சுவர், சீமெந்து உட்பட பொருட்களின் மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

இந்தப் புனரமைப்பு பணிகளுக்கு அரசாங்கம் 200 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ள போதிலும் அவற்றில் இதுவரை 54 மில்லியனே செலவிடப்பட்டுள்ளது.

இதற்கு படையினரின் ஈடுபாடும், தரச் சான்றிதழ் பெற்ற முன்னணி வர்த்தகர் ஒருவர் நிவாரண விலையில் சில பொருட்களை தந்துதவியதுமே காரணமாகும்.

இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களில் புனரமைப்பு பணிகளை முழுமையாக முடிக்க முடியும் என்றார்.

# இலங்கை - சீனா இடையே நாணயமாற்று உடன்படிக்கை

இலங்கையின் மத்திய வங்கி (CBSL) மற்றும் சீனாவின் மக்கள் வங்கிகளுக்கு (PBOC) இடைியிலான இருநாட்டு நாணய மாற்று விகித சம்பந்தமான உடன்படிக்கையொன்று கடந்த செவ்வாய்க் கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை ஒப்பந்த கைச்சாத்தின் மூலம் இலங்கையின் தேசிய நாணய அலகான ரூபாவினையும் சீனாவின் தேசிய நாணய அலகான யுவானினையும் வர்த்தக பரிமாற்றம் மூலம் பரிமாற்றம் செய்துகொள்ளமுடியும்.

மேலும் இப்பரிமாற்ற ஒப்பந்தம் முதல் நடவடிக்கையாக அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு உதவும் வகையில் 225 பில்லியன் இலங்கை ரூபாவினை (1.63 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) உம் சீனாவின் 10 பில்லியன் யுவானினையும் முதலீட்டு வைப்பிலிட்டுள்ளனர்.

இருநாடுகளுக்குமிடையிலான வர்த்தக முதலீட்டு ஒப்பந்தங்கள் மற்றும் நிதி கூட்டுறவு நிதியங்களின் வளர்ச்சி ஆகியன இவ் ஒப்பந்த உடன்படிக்கை மூலம் மேலும் விருத்தியடையும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# அரச பணியாளர்களின் ஒத்துழைப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கு தேவை

## சர்வதேச அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தலின்போது அரச பணியாளர்கள், தேர்தல் ஆணையாளருக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று ட்ரான்பேரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் கடமைகளின் போது அரச பணியாளர்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான சேவையை வழங்க வேண்டும் என்று அமைப்பு கேட்டுள்ளது.

இதேவேளை தேர்தலின் போது வேட்பாளர்களும் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்று ட்ரான்பேரன்ஸி இன்டர்நஷனல் கோரியுள்ளது.

அத்துடன் அவர் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச பணியாளர்களுக்கு உரிய கடமைகளில் ஈடுபட இடமளிக்க வேண்டும் என்று அமைப்பு கேட்டுள்ளது.

ஏற்கனவே ஊவா தேர்தல் பிரசாரங்களின்போது பாரிய வன்முறைகள் இடம்பெற்றன.

இதன்போது தாக்குதல்கள், பயமுறுத்தல் உட்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றன எனவும் தெரிவித்துள்ளது.

# தேர்தல் காலத்தை இலக்கு வைத்து எரிபொருள் விலை குறைக்கப்படவில்லை

## பெற்றோலிய வள அமைச்சர் தெரிவிப்பு



ஊவா மாகாணசபைத் தேர்தல்களை இலக்கு வைத்து அரசாங்கம் எரிபொருளுக்கான விலைகளை குறைக்கவில்லை என பெற்றோலிய வள அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை குறைப்புக் குறித்து கடநத மூன்று மாதங்களாக ஆராயப்பட்டு வந்தது.

எரிபொருள் விலைகளை குறைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறைந்த விலைகளில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு நலன்களை வழங்கும் நோக்கில் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டன.

இதில் எவ்வித தேர்தல் நோக்கங்களும் கிடையாது என்றார்.

# முறைப்பாடுகள் 424

ஊவா மாகாண தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் தேர்தல் வனமுறை தொடர்பில் இதுவரை 424 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதென நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

அதில் 305 முறைப்பாடுகள் மொனராகலை மாவட்டத்தில் இருந்தும் 100 முறைப்பாடுகள் பதுளை மாவட்டத்தில் இருந்தும் ஏனைய 19 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றதாக கபே குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பிரசார இறுதி தினமான நேற்றுமுன்தினம் மாத்திரம் 24 முறைபபாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும் அதில் அரச சொத்து பயன்பாடு, அரச அலுவலகங்களில் கூட்டம், இ.போ.ச. பஸ் பயன்பாடு, ஒலிபெருக்கி பயன்பாடு, பொருட்கள் பகிர்ந்தளித்தல் உள்ளிட்டவை அடங்குவதாக கபே இயக்கம் தெரிவித்துள்ளது.

# சந்தேக நபர்களை தாக்க பொதுமக்களுக்கு அனுமதி இல்லை

சந்தேக நபர்களை சிவிலியன்கள் தாக்க முடியாது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்ட சந்தேக நபர்களை தண்டிக்கவோ அல்லது தாக்குவதற்கோ சிவிலியன்களுக்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

இவ்வாறு தாக்குதல்களை நடத்தும் பொதுமக்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சந்தேக நபர்களை கைது செய்யப்போகும் போது பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# வேட்பாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது

## தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுகக முடியாது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க தெரிவித்துள்ளார். தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் தொகுதி ரீதியாக ஒரு அலுவலகத்தையே செயற்படுத்த முடியும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தடுப்பதற்கு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# நிலை நாட்டப்பட்டது நீதி

பெண் ஒருவருக்கு தவறுதலாக ஆயுள் தண்டனை விதித்தமைக்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் வருந்துவதாகத் தெரிவித்துள்ளது. இரண்டு பிள்ளைகளின் தாயான கருப்பைபயா பூங்கொடி என்ற பெண்ணே இவ்வாறு தண்டிக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பெண் ஒன்பது ஆண்டுகளாக சிறைத்தண்டனை அனுபவித்து வந்துள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகளின் குறைபாடுகளினால் இந்தப் பெண் வீணாக ஒன்பது ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க நேரிட்டதாக நீதவான் ஒப்புக் கொண்டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கான தண்டனையை இரத்துச் செய்து விடுதலை செய்வதாக மேன்முறையீட்டு நீதவான் ஏ.சலாம் அறிவித்துள்ளார். வழக்கு விசாரணைகளில் கால தாமதம் ஏற்பட்டதாக நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

வழக்குத் விசாரணைகள் கால தாமதமடைந்தமை வேதனையளிக்கின்றது. வழக்கு தாக்கல் செய்யாது தண்டனையை அனுபவித்திருந்தால் நன்நடத்தை மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் வழக்கு விசாரணைகளுக்கு முன்னதாகவே இந்தப் பெண் விடுதலையாகியிருக்கக்கூடிய சாத்தியங்களும் காணப்படுகின்றன.

துரித கதியில் வழக்கு விசாரணை நடத்தப்படாமையினால் பாதிப்புக்கள் ஏற்படுகினறன.

நிர்வாகக் குறைபாடுகளினால நாட்டு மக்களுக்கு நீதிகிடைக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணை நேர்மையான முறையில் நடைபெறவில்லை என்பது தெளிவாகின்றது இதனால பெண்ணை விடுதலை செய் கின்றேன்.

1998 ஆம் ஆண்டு 43 கிராம் எடையுடைய போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இந்தப் பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பிலான வழக்கு விசாரணைகளில் பெண் குற்றவாளி என கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்தது.

இதன்படி, 2005 ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதவான் ஆயுள் தண்டனை விதித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





யாழ்.பல்கலைக்கழக 3 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்கள் கொழும்புத்துறையில் அமைந்துள்ள சென்.ஜோசப் முதியோர் இல்லத்தில் மக்கள் தொடர்பாடல் செயற்றிட்டம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டனர். இதற்கு யாழ்.பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் பிரிவு மற்றும் wisdom Business Academy, jaffna அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அங்கு மாணவர்கள் இல்லத்தில் இருந்த வயோதிபர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்தனர்.

# மாணவர்களின் உயர்வு நிலைக்கு கல்வித்தகைமை மட்டும் போதாது

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வித் தகைமை மட்டும் போதாது நற்பண்பு இல்லை என்றால் எந்த உச்சம் போனாலும் உலகம் மதிக்காது என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்ற சிறந்த பெறுபேறுகள் எடுத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந் தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



கல்வி நிலமையிலுள்ள முக்கியமான பிரச்சினை தனியார் வகுப்புக்கள்.

ஏனெனில் மாண வர்களுடைய பிரித்தறியும் அறிவும், தேடிக் கற்றல் அறிவும் கெட்டுப் போவதற்கு காரணம் தனியார் வகுப்புக்கள் தான். மேலும் இணையப்பாவனை மாணவர்கள் மத்தியில் அதிகரித்துச் செல்வதனால் கல்வி அறிவு குன்றிப் போய்விடுகின்றது.

இணையத்தில் வெளிவரும் விஞ்ஞானம் சார்ந்த விடயங்கள் அனைத்தும் சரியானவை அல்ல என்னும் விடயத்தை நான் சுட்டிக்காட்டுவதுடன் கல்வித்தகைமையில் மட்டுமல்ல நற் பண்பிலும் சமூகத்தில் நற்பிரஜைகளாக மாணவர்கள் திகழ வேண்டும் என அவர் மேலும தெரிவித்தார். (48)

# வழித்தட அனுமதியற்ற பேருந்து சாரதிக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

வழித்தட அனுமதியில்லாமல் யாழ்ப்பாணம் - கொழும்பு பேருந்து சேவையில் ஈடுபட்ட பேருந்து சாரதிக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மேற்படி பேருந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சேவையில் ஈடுபட்ட போது, கொடிகாமம் பகுதியில் வைத்து பொலிஸாரால் வழி மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதன்போது, பேருந்துக்கு வழித்தட அனுமதி இல்லையென்பது தெரியவந்தது. இதனையடுத்து பேருந்தை பொலிஸ் நிலையம் கொண்டு' சென்ற பொலிஸார், பேருந்து சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சாரதி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு நீதவான் அபராதம் விதித்தார்.

# யாழ்.இந்துக் கல்லூரியின் தமிழ்த்தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் தமிழ் மொழித் தினவிழா கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செல்வன் ச.மயூரேசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா கலந்து கொள்வார்.

தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம், வில்லுப்பாட்டு, விவாத அரங்கு, உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்படவுள்ளதாக கல்லூரியின் முதல்வர் ஐ.தயானந்தராஜா அறிவித்துள்ளார். (48)

# முரசின் இன்றைய பலன்



(19.09.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 03 ஆம் திகதி.
சித்தயோகம் / ஏகாதசி திதி.
புனர்பூசம் நட்சத்திரம் காலை 06.46 வரை. பின் பூசம்.
இராகு காலம் 10.33 - 12.03 வரை. சுபநேரம் 06.03 - 07.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிரமுகர் சிபார்சின் மூலம் புதிய பதவிகள் கிடைக்க ஆவணத்தைச் சமர்ப்பித்தல், கருணை மனுவினால் ஏற்பட விருந்த இடமாற்றம் தற்காலிகமாக இரத்துச்செய்யப்படல். |
| ரிஷபம் | கட்டாயப்படுத்தி வேலை வாங்க முயற்சித்த வேளை ரகளை ஏற்படல், எதிரியின் அடாவடித்தனம் மேலோங்கியதால் எச்சரிக்கை செய்ய பொலிஸ் நிலையம் செல்லல். |
| மிதுனம் | செய் தொழிலில் சக ஊழியர்களைத்தட்டிக் கொடுப்பதால் பணி சிறப்புறல். |
| கடகம் | நீர்மூலம் வெளியூர் பயணம் செய்வதை மனைவி விரும்பாமையினால் கைவிட்டுவிடல், தந்தை மற்றும் சகோதர உதவி கிட்டியதினால் வர்த்தக நிலையம திறக்கும் முயற்சி ஆரம்பித்தல். |
| சிம்மம் | பணத்தைச் சரியாகக் கணக்கிட்டுப் பெறுவதினால் தில்லு முல்லு ஏற்படாமை. |
| கன்னி | நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவேளையில் உடல் நலக குறைவு ஏற்பட்டதால் வைத்தியசாலைக்கு விரைதல், தேக சௌக்கியம் மேம்பட கட்டுப்பாட்டை கடைப்பிடித்தல். |
| துலாம் | பேசி முற்றாகும் நிலையில் இருந்த விவாகம் சிறு சர்ச்சையால் கைவிடல், டெங்கு ஒழிப்பில் ஈடுபடல். |
| விருச்சிகம் | சுபகாரியமொன்று ஏற்பட்டதால் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்தல், பரீட்சைச்சித்தியினால் வேலை வாய்ப்புக்கிட்டும் யோகம் ஏற்படல். |
| தனுசு | அட்டமத்து வியாழன் இருப்பதினால் பயணமுயற்சிகளை ஒத்திவைத்தல், தேங்கிய பொருட்களை அதிரடியாக விற்பனை செய்ய விளம்பரம் செய்ய முயலுதல். |
| மகரம் | பிறரிடம் கொடுத்த பொறுப்பினை நீங்கள் மேற்பார்வை செய்ய நேரிடும். தந்தையின் தேகநலம் மேம்பாடு அடைவதினால் அச்ச நிலை அகன்றுவிடல். |
| கும்பம் | முரண்பட்டிருந்த சகஊழியர் உறவுக்கு கைகொடுக்க முன்வருதல், தொடுத்த வழக்கின் முடிவு சாதகமாக வரும் நிலைகண்டு மகிழ்வடைதல். |
| மீனம் | வியாழ சுகம் நல்லபடியாக அமைந்து காணப்படுவதினால புதிய முயற்சி தொடங்குதல், பொருள் கொள்வனவிற்காக திடீர் பயணம் ஏற்பட தொலைபேசி மூலம் அழைப்புவரல். |

# கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து இளைஞர் பேரவையினால் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் வவுனியா மாவட்டத்தில் உள்ள மணிப்புர கிராமத்தை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவ. கஜேந்திரகுமார், ஊடக இணைப்பாளர் கி.வசந்தரூபன், மணிப்புர கிராமத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வின் போது பேரவையின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இப்பேரவை தொடங்கப் பட்ட காலத்தில் இருந்து பல சமூகப்பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதில் ஒரு திட்டமாக கல்வியை ஊக்குவிக்கும் நோக்கோடு பின் தங்கிய கிராமத்தை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றோம். நீங்கள் கல்வியில் நல்ல பெறு பேறுகளை பெற்று சிறந்து விளங்க வேண்டும். கற்ற கல்வி எப்போதும் எம்மைக் கைவிடாது. ஆகவே நீங்கள் கல்வியை கற்பதற்கு எம்மால் இயன்ற உதவிகள் பெற்றுத் தரப்படும் என்றார். (70)

# இன்றைய ஆட்டம்

**கேப் கோப்ராஸ் எதிர் நோதேர்ண்**

**இடம் ராய்ப்பூர்**

**நேரம் இரவு 8 மணி**

## கம்பீர் அணியின் கம்பீரம்



(ஹைதாராபாத்)

சம்பியன் லீக் ருவென்ரி-20 சுற்றுத் தொடரின் முதல் போட்டியில் கொல்கத்தா அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஹைதாராபத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இப்போட்டியில் கொல்கத்தா, சென்னை அணிகள் மோதின. முதலில் ஆடிய சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 158 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா அணி 19 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

# சரியான தீர்ப்பிற்கு உதவிடும் வீடியோ


(லண்டன்)

கால்பந்து விளையாட்டின்போது தவறு செய்யும் வீரர்களுக்கு தண்டனை அளிப்பது தொடர்பான முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு வீடியோ காட்சிகளை போட்டி நடுவர்கள் பார்ப்பது உதவிடும் என்று இங்கிலாந்து கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் கிரெக் டைக் தெரிவித்துள்ளார்.

வீரர்கள் செய்யும் தவறினை கண்டறிவதற்காக நடுவர் வீடியோ பதிவை பார்க்க அனுமதிக்கலாம். ஆனால், ஒவ்வொரு முடிவு எடுப்பதற்கும் அனுமதி அளித்து கொண்டிருக்க முடியாது. போட்டி முடிவே இல்லாமல் சென்று கொண்டிருக்கும்.

ரக்பி போன்ற விளையாட்டுகளில் நடுவர்கள் முடிவு எடுப்பதற்கு அதிக கடினமான சூழலை எதிர்கொள்வதை பார்த்திருக்கலாம். இது கால்பந்து போட்டிக்கு சரியான விசயமாக இருக்காது. எனினும் தொழில்நுட்பத்தை கையாள்வது தொடர்பாக கவனமுடன் பரிசீலனை செய்யவேண்டும் என நான் நினைக்கிறேன். அடுத்த 10 வருட காலத்திற்கு பின் சில குறிப்பிட்ட முடிவுகளை எடுப்பதற்கு தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்தவில்லையே என்று நாம் திரும்பி பார்க்க கூடும்.

தொழில்நுட்பம் தொடர்பான விதிகள் மாறும். ஆனால் அதற்கு சற்று காலம் ஆகும். அதனை நாம் தான் மேற்கொள்ள வேண்டும். சில விசயங்களை நடைமுறைப்படுத்தி அவை சரியாக பயன் தருவதை கண்காணிக்க வேண்டும். ஏனென்றால் போட்டிகளில் கவனம் இல்லையெனில் போட்டியில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். அதிக வயது உடைய பிளாட்டர் 5ஆவது முறையாக தல்லவர் பொறுப்பில் இருப்பது தவறு. இளையவர்களுக்கு அவர் வழிவிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## முத்திரை வெளியீடு



இலங்கை அணியின் நட்சத்திர வீரர் மஹேல ஜெயவர்த்தனவை கௌரவிக்கும் விழாவொன்று கொழும்பில் உள்ள பிரபல விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி கொழும்பில் உள்ள ஒரு கல்லூரியின் பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும் முன்னாள் இலங்கை அணியின் தலைவரும் தபால் துறை பிரதியமைச்சருமான சனத் ஜெயசூரியா கலந்து கொண்டு மஹேல ஜெயவர்தனவை கௌரவிக்கும் வகையில் நினைவு முத்திரை ஒன்றையும் வெளியிட்டு வைத்தார்.

# சலவைக்கூட பெண்ணிடம் சேட்டை; பொலிஸ் காவலில் கால்பந்து வீரர்

(சியோல்)

சலவைக் கூடத்தில் வேலை செய்த பெண்ணிடம் தவறாக நடந்து கொண்ட, பாலஸ்தீன கால்பந்து வீரர், தென் கொரியாவை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டது.

ஆசிய விளையாட்டு தென் கொரியாவில் இன்று ஆரம்பமாகவுள்ளது. கால்பந்து போட்டிகள் முன்னதாகவே ஆரம்பித்துவிட்டன. இதில் பங்கேற்கும் வீரர்கள் ஆசிய விளையாட்டு கிராமத்தில் தங்கியுள்ளனர்.

பாலஸ்தீனத்தை சேர்ந்த 20 வயது வீரர் ஒருவர், சலவைக்கூடத்தில் வேலை செய்யும் 25 வயதுள்ள பெண்ணிடம், தவறாக நடந்து கொண்டார்.

இது குறித்து இன்ச்சியான் நகர பொலிஸ் தலைமை அதிகாரி கிம் கியுன் கூறுகையில், பிடிபட்ட வீரரிடம் விசாரித்து வருகிறோம். விரைவில் வழக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்போம். இந்த வீரர் தென் கொரியாவை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார். நேற்று முன்தினம், ஈரான் கால்பந்து அணியின் தொழில் நுட்ப பிரிவு 38 வயது முகாமையாளர் ஒருவர், அன்சான் மைதானத்தின் 21 வயது பெண் ஊழியரிடம் தவறாக நடக்க முயற்சித்தார். இவரும் பொலிஸாரிடம் சிக்கினார்.

## களத்திற்கு வெளியில்....

கொல்கத்தா போன்ற வலுவான அணிகளுக்கு எதிராக நாங்கள் எடுத்த ஓட்ட எண்ணிக்கை போதுமானதாக இல்லை. அவர்களது சுழற்பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. குறிப்பாக சுனில் நரைன் சிறப்பாக பந்துவீசி எங்களுக்கு நெருக்கடி அளித்தார். எங்கள் அணியின் வேகப்பந்து வீரர்கள் சிறப்பாக செயற்பட்டனர். அந்த அணியின் பின்கள வீரர்கள் ரஸ்சல், டென்டஸ்சாட் சிறப்பாக விளையாடி மாற்றத்தை ஏற்படுத்திவிட்டனர். அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டு வெற்றியைப் பதிவாக்குவோம்.

**டோனி (சென்னை அணிக் கப்டன்)**

சென்னை அணிக்கெதிரான போட்டியில் ரஸ்சல், ரியான் ஆட்டம் நம்ப முடியாத வகையில் அபாரமாக இருந்தது. இந்த நேரத்தில் சுனில் நரைனைப் பற்றி கண்டிப்பாக சொல்லி ஆக வேண்டும். 4 ஓவரில் 9 ஓட்டங்களைக் கொடுத்து அவர் சிறப்பாக பந்து வீசினார். அவர் ஒரு சம்பியன் பந்துவீச்சாளர். தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்டு அரையிறுதிக்கு முன்னேறுவதே எங்கள் முதல் இலக்கு.

**கம்பீர் (கொல்கத்தா அணி கப்டன்)**

தொழில்பூர்வ கிரிக்கெட் வீரர்களுக்கு ஐ.சி.சி. உலகக் கோப்பை என்பது மிகப்பெரிய உலகத் தொடராகும். இதற்காக அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன, இந்தச் சவாலுக்கு பாகிஸ்தான் அணியும் தங்கள் தரப்பில் கடுமையான தயாராதலில் ஈடுபட்டுள்ளது. 1992ஆம் ஆண்டிற்குப் பின் அவுஸ்ரேலியா-நியூசிலாந்தில் 2ஆவது முறையாக உலகக் கோப்பை போட்டிகள் நடைபெறுகின்றன. 1992ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி சம்பியனானது. இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி உலகக் கோப்பையை பாகிஸ்தான் முதன் முதல் கைப்பற்றியது.

**மிஸ்பா உல் ஹக் (பாகிஸ்தான்)**

சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடரின் முதன்மை சுற்றுக்கு தகுதி பெறத் தவறியமை மிகுந்த வேதனை அளிக்கிறது. முடிந்த வரை போராடினோம். இரண்டு போட்டிகளில் வெற்றி பெற முடியாமல் போய்விட்டது. அணி நிர்வாகம் எங்கள் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தது. எங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாமல் போயிவிட்டது.

**போலாட் (மும்பை இந்தியன்ஸ் அணிக் கப்டன்)**

# குதிரையேற்றப் போட்டியில் தாய்லாந்து இளவரசி

(இன்சியோன்)

17ஆவது ஆசிய விளையாட்டு போட்டி தென் கொரியாவில் உள்ள இன்சியோன் நகரில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இதன் குதிரையேற்றம் பந்தயத்தில் தனிநபர் மற்றும் அணிகள் பிரிவில் 27 வயதான தாய்லாந்து இளவரசி ஸ்ரீவன்னவாரி நாரிரத்னா கலந்து கொள்ளவுள்ளார.

2006ஆம் ஆண்டு டோகாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் பட்மின்ரன் அணிகள் பிரிவில் இடம் பெற்ற இளவரசி ஸ்ரீவன்னவாரி, இந்த முறை குதிரை யேற்றத்தில் பங்கேற்கவிருக்கிறார். சிறுவயது முதலே குதிரை யேற்றத்தில் ஆர்வம் கொண்டவர் இளவரசி ஸ்ரீவன்னவாரி என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய விளையாட்டு போட்டிக்காக தீவிரமாக தயாராகியிருக்கிறேன். இந்தப் போட்டியில் எனது சிறந்த திறனை வெளிப்படுத்துவேன் என்று இளவரசி ஸ்ரீவன்னவாரி நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஸ்ரீவன்னவாரி, தாய்லாந்து மன்னர் பூமிபால் அடுல்யாதேஜ்ஜின் பேத்தி ஆவார். சர்வதேச குதிரையேற்றம் பந்தயத்தில் அரச குடும்பத்தினர் கலந்து கொள்வது இது முதல் முறையல்ல. ஏற்கனவே இங்கிலாந்து இளவரசி சாரா பிலிப்ஸ், சவூதி அரேபியா இளவரசர்கள் அப்துல்லா பின், பைசல் அல் ஷாலன் ஆகியோர் ஒலிம்பிக் குதிரையேற்ற போட்டிகளில் பங்கேற்றிருக்கின்றனர்.



## கிளார்க் விலகல்

(சிட்னி)

பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரிலிருந்து காயம் காரணமாக அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க் விலகியுள்ளார்.

சிம்பாப்வேயில் நடைபெற்ற முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் போது காலில் ஏற்பட்ட தசைப் பிடிப்பால் அவுஸ்திரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் பாதியிலேயே விலகினார்.

இந்த நிலையில் காயம் முழுமையாக குணமடைய சற்று காலம் பிடிக்கும் என்பது தெரியவந்துள்ளதால், அடுத்த மாதம் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான 3 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரிலிருந்தும் அவர் விலகியுள்ளார்.

அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலும் அவர் ஆடுவது சந்தேகம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வாரத்திற்கு ஒரு கோடி

## சூமோக்கரின் மருத்துவச் செலவு


(சுவிஸ்)

மைக்கல் சூமோக்கரின் மருத்துவ செலவு வாரத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

பார்முலா-1 கார் பந்தயத்தின் முடிசூடா மன்னனாக இருந்தவர் மைக்கல் சூமோக்கர். இவர் ஓல்ப்ஸ் மலைப்பகுதியில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருக்கும்போது திடீரென சறுக்கி விழுந்தார். இதில் அவர் தலையில் பலத்த அடிபட்டு ஹோமா நிலைக்குச் சென்றார்.

கடந்த 9 மாதங்களாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த சூமாக்கர் சமீபத்தில் வீடு திரும்பினார். இப்போது சுவிஸ்சர்லாந்தில் உள்ள அவரது வீட்டில் சிகிச்சைக்கென தனியாக ஒரு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையை அமைக்க சுமார் 35 மில்லியன் பவுண்ட்ஸ் (இந்திய மதிப்பில் 350 கோடி ரூபாய்) செலவிடப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் சூமாக்கருக்கு 15 பேர் கொண்ட மருத்துவக்குழுவினர் 24 மணி நேரமும் சிகிச்சை அளிப்பார்கள். இதனால் அவரது மருத்துவ செலவிற்கு வாரம் ஒரு இலட் சம் பவுண்ட்ஸ் (ஒரு கோடி ரூபாய்) செலவாகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பளு தூக்கலில் அசத்தும் யாழ். இந்துவின் மைந்தர்கள்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கும் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர்கள் ஒரு தங்கம் உட்பட 8 பதக்கங்கள் வென்றுள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டி கடந்த 14,15,16 ஆம் திகதிகளில் கேகாலை அரநாயக்க திப்பிட்டிய ராஜகிரிய மகாவித்தியாலய உள்ளரங்கில் நடைபெற்றது.

இதில் யாழ். இந்துக் கல்லூரி வீரர்கள் ஒரு தங்கம், மூன்று வெள்ளி, நான்கு வெண்கலம் உட்பட எட்டுப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

17 வயதுப் பிரிவில் விதுஷன் தங்கப் பதக்கத்தையும், 17 வயதுப் பிரிவில் மிதுன் மற்றும் பபிலன் 19 வயதுப் பிரிவில் கிருஷிகன் ஆகியோர் வெள்ளிப்பதக்கத்தையும், 17 வயதுப் பிரிவில் மைத்திரேயன் சர்மா, சிறிசாந், அஜித்ராம் மற்றும் 19 வயதுப் பிரிவில் அபிஷேக் ஆகியோர் வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளனர். வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பழுதூக்கல் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி வீரர்கள் 28 பதக்கங்களை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. (48)

# சாதனை மேல் சாதனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆஷிகா விஜயபாஸ்கருக்கு கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், துறை சார்ந்த அதிகாரிகள் எனப் பலர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டி கடந்த 14,15,16ஆம் திகதிகளில் கேகாலையில் நடைபெற்றது. இதில் 17 வயதுப் பிரிவுக்கான போட்டியில் பங்குபற்றிய சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 13 வயதுடைய ஆஷிகா விஜயபாஸ்கர் 63 கிலோ எடைப் பிரிவிற்குட்பட்டோருக்கான போட்டியில் 112 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றார்.

வடமாகாணப் பாடசாலைகள் மற்றும் விளையாட்டுத் திணைக்களம் ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்ற ஆஷிகா விஜயபாஸ்கரின் ஆற்றல் பாராட்டிற்குரியது. இந்த ஆற்றலை மேலும் வளர்க்க வேண்டிய தார்மீக பொறுப்பு வடமாகாணத்தைச் சேர்ந்த விளையாட்டு ஆர்வலர்களுக்கு உண்டு. எனவே, அவரின் ஆற்றலை மேலும் வலுப்படுத்தும் வகையில் நவீன பளு தூக்கல் கருவிகளையும், சிறந்த பயிற்றுவிப்பாளர்களையும் உருவாக்கிக் கொடுக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாக தாய் நாட்டிற்கும், மாகாணத்திற்கும் எமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்கக்கூடிய ஆற்றல் அவரிடம் இருக்கின்றது. எனவே, இதனை துறை சார்ந்தோர் உடனடியாக கருத்தில் எடுத்து செயற்பட வேண்டும். ஆஷிகாவின் இந்த முயற்சிக்கு பெற்றோரின் பங்களிப்பு இன்றியமையாததொன்றாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த வேளையில் அவருக்கு ஊக்கம் கொடுத்து அவரை உற்சாகப்படுத்திய பெற்றோருக்கும் எமது வாழ்த்துக்கள் எனவும் விளையாட்டுத்துறை சார்ந்தோர், கல்விமான்கள் என பலர் பாராட்டு தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# முல்லையில் நாளை மாகாண விளையாட்டு

(ஒட்டுசுட்டான்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டு விழா நாளையும், நாளை மறுதினமும் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவுள்ளனர்.

இதேவேளை, யாழ். மாவட்டம் பெருவிளையாட்டுப் போட்டிகளில் 16இற்கும் மேற்பட்ட இடங்களைப் பிடித்து முதலிடத்தில் உள்ளது. இதேபோன்று தடகளப் போட்டியிலும் முழு ஆதிக்கம் செலுத்தி அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

போட்டியில் பங்குபற்றவுள்ள வீர,வீராங்கனைகளை ஒருங்கிணைத்து சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும், வீர,வீராங்கனைகளின் செயற்பாடு ஆரோக்கியம் மிக்கதாக இருந்ததாகவும், இதன் மூலம் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.


இதேவேளை, இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எஸ்.பி., 93)

## விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டம் இன்று யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணியும் ஹங்கம விஜய மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன. இப்போட்டியில் சிறப்பாக செயற்பட்டு வெற்றி வாகைசூட வேண்டும் என்ற நோக்கில் கடந்த ஒரு வாரமாக யாழ். மத்திய கல்லூரி அணி தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் இலங்கை கராத்தே சம்மேளனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தே போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தோர் ஒன்பது தங்கம் உட்பட 13 பதக்கங்களை வென்றுள்ளனர். இப்போட்டி கடந்த 14ஆம் திகதி கொழும்பு மகரகம இளைஞர் சேவை மன்ற உள்ளக அரங்கில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணத்தின் பிரபல கராத்தே ஆசிரியர் சென்சே விஜயராஜிடம் கராத்தேக் கலையைக் கற்கும் மாணவர்கள் பலர் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தினர். தனிக் காட்டா, குமித்தே போன்ற போட்டிகள் நடைபெற்றன. இதில் வி. தமிழ்நிலவன் காட்டா மற்றும் குமித்தே ஆகிய போட்டிகளில் தங்கப் பதக்கத்தையும், வி. நிவேதன் காட்டா மற்றும் கறுப்புப் பட்டிக்கான குமித்தே போட்டிகளில் தங்கப் பதக்கத்தையும், எஸ். அன்பன் காட்டாப் போட்டியில் வெண்கலம் மற்றும் குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும், ரி. கேசவன் காட்டா மற்றும் குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும் கே. ஆதவன் கமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், ரி. ஐங்கரன் குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும், எஸ். காந்தரூபன் மண்ணிறப்பட்டிக்கான குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் எஸ். றஜிதரன் கறுப்புப் பட்டிக்கான குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும், எஸ். விஜயராஜ் காட்டா மற்றும் குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். இப்போட்டியில் பதக்கங்களை வென்றோர் சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் சி.எஸ்.டி ஆகியவற்றின் சென்.சே விஜயராஜிடம் கராத்தே கலையை கற்றுவரும் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பதக்கம் வென்றோர் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி.)

# வென்றது கே.சி.சி.சி.

(கொக்குவில்)

வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணிக்கெதிரான போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 116 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணிகள் மோதின.

முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 30 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆர்.இராகுலன் 93, என்.உமாநாத் 53 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு 256 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஓல்கோல்ட் அணி 30 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. (93)

பாதையை மாற்றுவதற்காக முள்ளுக்கம்பி வேலி ஒன்றைக் கடக்க முயன்றிருக்கிறார்.

கொண்டு சென்றனர்.

அதன் பின்னர் முரசு மோட்டையைச் சேர்ந்த கட்சி ஆதரவாளர்களான லான பொலிஸ் குழு கைது செய்ததாயினும், அப்பொழுது விசுவமடு படித்த வாலிபர் திட்டப் னால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட யாழ்.புத்தக நிலையத்தில் பணி புரிந்தார். பின்னர் விசுவமடுவில் மனைவியுடன் வாழ்ந்திருந்து இறுதி யுத்த காலத்தில் முள்ளிவாய்க்காலுக்கு இடம் பெயர்ந்திருந்த நேரத்தில் எறிகணை வீச்சுக்காளாகி மரணித்துவிட்டார்)

இதேநேரத்தில் ஜே.வி.பி. கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**10**

- சுப்பராஜன் [வானவில் இதழ்]


அப்பொழுது கிளிநொச்சியில் துன்னாலையைச் சேர்ந்த கணேசன் என்பவர் பொலிஸ் இன்ஸ்பெக்ட்ராகவும், நாதன் என்றழைக்கப்படும் சித்தன்கேணியைச் சேர்ந்த கதிர்காமநாதன் என்பவர் உதவி இன்ஸ்பெக்டராகவும் இருந்தனர்.

(இந்த நாதன் தான் யாழ்.கோட்டை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீரவை சிறையை உடைத்து விடுவிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் அந்த முயற்சி கைகூடாமல் போகவே தென்னிலங்கைக்குத் தப்பியோடுகையில் ஆனையிறவு தடுப்பு முகாமில் அவர்களில் சிலரைச் சுட்டுக் கொன்றவர்)

பொலிசார் முரசுமோட்டையில் கட்சி அமைப்பாளராக இருந்த பா.கணேசபிள்ளையைப் பிடிப்பதற்காக ஒருவரைத் தயார் செய்தனர். சின்னையா என்ற பெயருடைய அவன் கணேசபிள்ளையுடன் சில நாட்களாக நெருங்கிப் பழகி அவரது நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டான். அந்த நாட்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு இடங்களில் தங்குவது வழமை.

அதுபோலவே கணேசபிள்ளையும் ஒரு இரவு முரசுமோட்டையில் ஒரு கட்சி உறுப்பினர் வீட்டில் தங்கியிருந்த நேரம் அந்த சின்னையா என்பவனும் அவருடன் தங்கியுள்ளான்.

அடுத்தநாள் காலை அவர்கள் எழுந்து வேறொரு இடத்துக்குப் புறப்படுகையில் பிரதான வீதியில் பொலிஸ் ஜீப் ஒன்று நிற்பதை அவதானித்த கணேசபிள்ளை,




அந்த நேரம் பார்த்து பொலிசார் கொடுத்து மறைத்து வைத்திருந்த கிறீஸ் கத்தியை எடுத்த சின்னையா கணேசபிள்ளையின் பழுவில் குத்திவிட்டான். அந்தக் குத்துடனும் கணேசபிள்ளை வயல் வெளிகளினூடாக நீண்ட தூரம் ஓடியிருக்கிறார். அதேநேரம் பொலிஸ் ஜீப்பும் அவரைக் கலைத்திருக்கிறது.

இறுதியில் கணேசபிள்ளை களைத்துப்போய் மயங்கி விழுந்த நேரம் பொலிசார் அவரைக் கைதுசெய்து ஜீப்பில் தூக்கிப்போட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

கிட்டு, தங்கத்துரை உட்படப் பலரைப் பொலிசார் கைது செய்தனர். இவர்கள் எல்லோரும் ஜே.வி.பி. தலைவர் ரோகண வியேவீரவுடன் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் ஒன்றாக அடைத்து வைக்கப்பட்டனர்.

இதுமாதிரி வட்டக்கச்சி கட்சிப் பொறுப்பாளர் தவலிங்கம் என்பவரைக் கைதுசெய்ய பொலிசார் வேறொரு தந்திரத்தைக் கைக்கொண்டனர். அவரது வட்டக்கச்சி வீட்டில் இரவில் அவர் மட்டுமே தங்குவது வழமை. எனவே பொலிசார் ஓர் இரவு நேரத்துடனேயே அவரது வீட்டுக்குள் புகுந்து அவரைக் கைது செய்வதற்காக இரவு முழுவதும் காத்திருந்தனர்.

ஆனால் இந்தத் தகவல் தவலிங்கத்துக்கு அயலவர்களால் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டு விட்டதால், அவர் அன்றிரவு தனது வீட்டுக்குப் போகாமல் பொலிசாருக்கு "டிமிக்கி" கொடுத்துவிட்டார்.

விசுவமடுவிலும் வாமதேவன் என்ற முக்கிய கட்சி அமைப்பாளரைப் பொலிசார் தேடி வந்தனர். அவரை முன்னரும் ஒருதடவை (இராணுவத்துக்கும் தருமபுர மக்களுக்கும் ஏற்பட்ட மோதல் சம்பவத்தின் போது) அப்போது கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்த சின்னையா தலைமையிலான பொலிஸ் குழு கைது செய்ததாயினும், அப்பொழுது விசுவமடு படித்த வாலிபர் திட்டப் பொறுப்பாளராக இருந்த விவசாய உத்தியோகத்தர் கோமளேஸ்வரன் என்பவரின் முயற்சியால் விடுவிக்கப்பட்டுவிட்டார்.

(வாமதேவனை பொலிசார் அவரது காணியில் வைத்துக் கைதுசெய்த நேரம் வட பிரதேச கட்சிச் செயலாளர் வீ.ஏ.கந்தசாமியும் வேறு பல முக்கிய கட்சி உறுப்பினர்களும் அவரது வீட்டுக்குள் கூட்டம் ஒன்றை நடாத்திக்கொண்டிருந்தனர். பொலிசார் வீட்டுக்குள் வந்து பார்த்துவிட்டால் விபரீதமாகப் போய்விடும் என்பதால், பொலிசாரைக் கண்டதும் வாமதேவன் தானாகவே வெற்று உடம்புடன் எழுந்து சென்று பொலிசாருடன் சென்றார்)

ஆனால் ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது பொலிசார் தேடியும் வாமதேவன் அகப்படாததால், அவரது காணிக்குப் பக்கத்துக் காணிக்காரரான மண்டைதீவைச் சேர்ந்த சி.தா. முத்துலிங்கம் என்ற கட்சி ஆதரவாளரைக் கைது செய்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சில நாட்கள் வைத்திருந்து அடித்துச் சித்திரவதை செய்துவிட்டுப் பின்னர் விடுதலை செய்தனர்.

(இவர் பின்னர் கட்சியினால் யாழ்ப்பாணத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த காமினி யாப்பா (இவரும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சண்முகதாசனால் வெளியேற்றப்பட்டவர் தான்) தலைமையிலான "கீழைக்காற்று இய்க்கம்" என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் (அந்த நேரத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வவுனியா அமைப்பாளராக இருந்த அ.கௌரிகாந்தனும் கீழைக்காற்று இயக்கத்தில் சேர்ந்து விட்டிருந்தார்) அரசாங்கத்திற்கு எதிராக யாழ்.வைத்தியசாலைச் சுவரில் சில சுலோகங்களை எழுதிவிட்டனர்.

இந்தச் சுலோகங்களை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் எழுதியிருக்க வேண்டும் எனச் சந்தேகித்த பொலிசார், கட்சியின் வட பிரதேசக் குழு உறுப்பினரும், இலங்கை தேசிய ஆசிரிய சங்க (லங்கா குரு சங்கமய) வட பிரதேசச் செயலாளருமான எம்.குமாரசாமி உட்பட சிலரைக் கைதுசெய்து அவர்களைத் துன்புறுத்தியதுடன். அவர்களைக் கொண்டு சுண்ணாம்பின் மூலம் அந்தச் சுலோகங்களையும் அழிக்க வைத்தனர்.

(தொடரு[illegible]

சைக்கிளில் போகும்போது மழை வந்துவிட்டால் என்ன செய்வது? சைக்கிளை நிறுத்திவிட்டு மழையில் நனையாமல் எங்காவது ஒதுங்க வேண்டியதுதான் என்று சொல்வீர்கள்.

ஆனால் மழை பெய்தாலும் நனையாமல் சைக்கிளில் செல்ல ஒரு குடையை சைக்கிளுடன் இணைத்துவிட்டால்?, டச்சு நிறுவனம் ஒன்று இந்த சைக்கிள் குடையை வடிவமைத்திருக்கிறது.

"நம்ம ஊரில் அடிக்கும் காற்றில் குடையைப் பிடித்துக் கொண்டு நடக்கவே முடியவில்லை. அதுவும் இப்போது வரும் குடைகள் எல்லாம் காற்றின் வேகத்தில் வானத்தைப் பார்த்து விரிந்துவிடுகின்றன. குடையை மாட்டிக் கொண்டு சைக்கிளை முதலில் ஓட்ட முடியுமா? குடை பிய்ந்து போகாதா?" என்றெல்லாம் கேள்விகளை அடுக்குகிறீர்களா?

சைக்கிளில் இணைத்துக் கொள்ளக் கூடிய இந்தக் குடை, மணிக்கு 113 கி.மீ. வேகத்தில் காற்றடித்தாலும் தாங்குமாம்.

## சைக்கிள் குடை



## மொஸ்கோ டயரி

முன்னாள் சோவியத் யூனியனுக்கான இந்தியத் தூதர் கே.பி.எஸ்.மேனன், "மொஸ்கோ டயரி" என்ற தனது நூலில் எழுதியிருப்பது:

பிப்.,18, 1953 அன்று இரவு, 8:00 மணிக்கு ரஷ்ய ஜனாதிபதி ஸ்டாலின் என்னைக் காண இசைந்துள்ளார் என்று, 4:00 மணிக்கு டெலிபோன் செய்தனர். என் காரின் நம்பரையும், சாரதியின் பெயரையும் கேட்ட பின், "கிரெம்ளின் கோட்டையின் பராவிட்ஸ்கி வாசலருகில், 7:45 மணிக்கு வர வேண்டும்..." என்றனர்.



தூதரகத்திலிருந்து, 7:30 மணிக்குப் புறப்பட்டோம். சாரதி வான்யாவுக்கு, ஸ்டாலினை தான் ஒருமுறை கண்ணால் பார்க்கப் போவதில் அளவு கடந்த மகிழ்ச்சி. எனக்கு ரஷ்ய மொழி கற்றுத் தரும் ராயா என்பவர், என்னுடைய கைகளைப் பிடித்துக் குலுக்கினார். "ஸ்டாலின் கைகளைக் குலுக்கப் போகும் ஒருவரின் கைகளை, நான் குலுக்குகிறேன்.,." என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார்.

பராவிட்ஸ்கி வாசலில் எங்களை அடையாளம் கண்டு கொண்டனர். ஒரு கார் முன்னே வழிகாட்டிக் கொண்டு சென்றது. நாலைந்து மீட்டர் தூரத்திற்கு ஒரு சிப்பாய் வீதம், சல்யூட் அடித்தனர்!

கார் ஒரு புதிய கட்டடத்தின் முன் நின்றது. கிரெம்ளின் ரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவர், எனக்கென அங்கீகரிக்கப்பட்ட அறையில் சிறிது நேரம் இருக்கச் சொன்னார். அங்கே ஸ்டாலினின் மொழி பெயர்ப்பாளர் பாவ்லாங் வந்து சேர்ந்து கொண்டார்.

சரியாக, 8:00 மணிக்கு ஸ்டாலின் இருந்த அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஸ்டாலின் இராணுவச் சீருடை அணிந்திருந்தார். முன்னே வந்து என்னுடன் கை குலுக்கி, மேசையருகே அழைத்துப் போனார்.

அதன்பின், "உங்கள் நாட்டின். பிரதான மொழி உருதுவா... இந்துவா? (அவர் இந்தியை இந்து என்று உச்சரித்தார்) எல்லா மொழிகளும் ஒரே மூலத்திலிருந்து வந்தவையா? ஏன் அவை வெவ்வேறு வழியில் வளர்ச்சி அடைந்தன? குஜராத்திகள் என்ன மொழி பேசுகின்றனர்..." என்று கேட்டார். எனக்குத் தெரிந்த வரை பதில் சொன்னேன்.

"இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பாடு செய்து கொள்ளக் கூடாதா... அப்படி செய்தால்

**1986**ஆம் ஆண்டு வெளியானது தி ஃபிளை (The Fly) என்ற ஹொலிவுட் திரைப்படம். பொருட்களை மின்காந்த அலைகளாக மாற்றி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அனுப்புவதற்கான அறிவியல் ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார், ஹீரோ. அந்த சோதனையில் தன்னையே உட்படுத்திக் கொண்ட போது, அனுப்பும் தளத்தில் ஒரு ஈயும் சேர்ந்து விட, ஹீரோ மனிதனும், ஈயும் சேர்ந்த கலப்பினமாக மாறி விடுகிறார். அதனால் அவரது உடம்பிலும், முகத்திலும் ஏற்படும் மாற்றங்கள், மீண்டும் மனிதனாக மாறுவதற்கான போராட்டங்கள், இடையில் காதலியுடனான பிரச்சினைகள் என்று படம் போகிறது.

# விலங்கு மனிதனாக மாறும் விக்ரம்


தி ஃப்ளை


ஐ

இந்தப் படம் பற்றி ஷங்கர் கேள்விப் படுகிறார். மனிதன் ஈயாக மாறுகிறான், முகம் விசித்திரமாக, விகாரமாக மாறுகிறது. ஓடுகிறான், பாடுகிறான். இதை முழுமையாக காட்டாவிட்டாலும் படத்தின் பட்ஜெட், புதுமைக்காக மினிமமாக இதை பயன்படுத்தலாம், இந்த கான்செப்ட் நல்லா இருக்கே, என்று யோசித்திருக்கிறார். அதையே தனது "ஐ" படத்தில் தமிழ் சினிமா ரேஞ்சுக்கு கதை கட்டியிருக்கிறார். எத்தனை நாள் அப்பள வியாபாரத்தையே காட்டுவது, இப்போது ஐடி காலத்தில் எது·சீசன் என்று ஆள் வைத்து யோசித்திருப்பார். இப்படித்தான் விக்ரம் ஒரு விளம்பர மொடலாக மாறுகிறார். சங்கரும் 2014 இற்கு அப்கிரேட் ஆகிறார்.

ஐ படத்தின் டீசர் பிரிவியூ பார்த்த பத்திரிகையாளர்கள் அது ஹொலிவுட்டின் ஹல்க் படம் போல இருப்பதாக சொன்னார்களாம். அது ஹல்க் படம் இல்லை என்று சங்கர் சிரித்துக் கொண்டே சொன்னாராம். இதுதான் தமிழ்நாட்டு மக்களுக்கு உலக நடப்புகளை கொண்டு வந்து சேர்க்கும் பத்திரிகையாளர்களின் லட்சணம்.

ஷங்கர் இந்தப் படத்தின் கதையாக சொல்லியிருப்பது, ஆண் மொடலுக்கு வில்லன் மருந்து செலுத்தி விலங்கு மனிதனாக மாற்றுவது என்று போகிறது. அடிப்படையில் பல காட்சிகள் ஃபிளை படத்திலிருந்து வருகின்றன.

இணையத்தில் பார்க்க கிடைத்தவை படி, இந்தப் படத்தில் நடிகர் விக்ரம் ஒரு விளம்பர மொடலாக போராடி வெற்றி பெறுகிறார். பொறுக்காத போட்டி விளம்பர வில்லன் நடிகர் வைரஸ் கிருமி மருந்தை விக்ரம் உடலில் செலுத்துகிறார். விக்ரம் உடல் மாறுகிறது. அதையே அதிகமாக காட்டினால் பெண்கள், குழந்தைகள் வரமாட்டார்கள், குடும்பப் படமாக மாற்ற முடியாது என்பதால் அசிங்கமான விக்ரமை வைத்து பல்வேறு ஆக்சன் காட்சிகள், கிராபிக்ஸ் பாடல்கள் என்று பலன்ஸ் செய்து கொள்கிறார். இறுதியில் விக்ரம் தனது சிக்ஸ் பேக் உடலை திரும்பப் பெற்று வில்லனை வீழ்த்தி நாயகியை கைபிடிப்பார் என்பது இனி பிறக்கும் குழந்தை கூட அறியும் அற்ப விசயம்.

இதை ஒரு மாபெரும் படம் போலவும், புதுமை போலவும் பல்வேறு இணைய மொக்கைகள் போடும் கச்சேரிதான் இதில் உள்ள மகா மட்டமான விசயம்.

உழைப்பதற்கு ஏற்ற ஆரோக்கியத்தை கொண்டிருக்க வேண்டிய உடலை பார்ப்பதற்கு மட்டும் அழகான உடலாக மாற்றிய முதலாளித்துவ நுகர்வுக் கலாசாரத்தின் வக்கிரத்தை ஏற்றுக் கொள்ளும் உணர்ச்சிதான் ஐ படத்தின் மையம். மாறுபடும் மனிதர்களின் நிறம், தோற்றத்தை அவலட்சணமாக மாற்றியிருக்கும் முதலாளித்துவத்தின் அழகுசாதன முதலாளிகளை ஆராதிக்கும் படத்தின் கதையை கொண்டாடுவது என்ன விதத்தில் சரி?

**- வினவு**

அது எவ்வளவு நல்ல ஏற்பாடாக இருக்கும்..." என்றார்.

"இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே உறவு துண்டிக்கப்பட்டு, பரஸ்பர நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது; எனவே, அது நடப்பதற்கு அதிக நாள் பிடிக்கும்..." என்றேன்.

"ஒரு மதத்தின் பெயரால், ஒரு இராச்சியத்தை ஏற்படுத்துவது மிகவும் பிற்போக்கான காரியம்..." என்றார் ஸ்டாலின். அவருடைய புத்திக் கூர்மை அவரது பேச்சிலிருந்தும், அவர் பேசாது இருந்ததிலிருந்தும் வெளிப்பட்டது.

புடாபெஸ்ட், மார்ச் 5, 1953 அன்று, மொஸ்கோவில் இருந்து வந்த செய்திகளில், ஸ்டாலின் நோய்வாய்ப்பட்டுக் கிடப்பதாகத் தெரிந்தது. நான் அவரைப் பார்த்து இரண்டு வாரம் தான் இருக்கும்; நான் தான் அவரைக் பார்த்த கடைசி வெளிநாட்டுப் பிரதிநிதி.

"ஸ்டாலின் எப்படி இருந்தார்... என்ன உடையணிந்து இருந்தார்... அவர் சுருட்டோ, சுங்கானோ பிடித்திருந்தாரா, அணிந்திருந்தது பூட்ஸா இல்லை செருப்பா, அறையில் லெனின் படம் இருந்ததா, என்னை வரவேற்ற போது எழுந்து நின்றிருந்தாரா அல்லது உட்கார்ந்தபடி இருந்தாரா, உலக நிலையைப் பற்றி கவலையோடு இருந்தாரா..." என லண்டன், பாரிஸ் மற்றும் ஸ்ரொக்ஹோம் போன்ற இடங்களிலிருந்து, தொலைபேசி தகவல் வந்து கொண்டே இருந்தது.

மார்ச், 6, 1953, ஸ்டாலின் இறந்து விட்டார்.

அவருடைய வாழ்க்கை, அநேக வீடுகளுக்கு ஆனந்தத்தையும், அநேக வீடுகளுக்கு துக்கத்தையும் கொண்டு வந்தது.

திருமண விசேஷங்களில் நாதஸ்வரம் வாசிப்பதைப் பார்த்திருக்கிறோம். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் வாசிக்கப்படும் ராகங்கள் பற்றி பலருக்குத் தெரியாது. அது குறித்த விவரம்:

மாப்பிள்ளை அழைப்பிற்கு: கல்யாணி, சங்கராபரணம்.

ஊர்வலத்தில்: தோடி, காம்போதி, கரகரப்பிரியா

திருமண மண்டபத்தில்: கானடா, அடாணா, பியாகடை.

திருமண நாளன்று காலையில்: பூபாளம், கேதாரம்


முகூர்த்தத்திற்கு முன்பு: தன்யாசி, காபி நாராயணி

முகூர்த்தம் நடக்கும் போது: நாட்டைக் குறிஞ்சி

தாலிகட்டும் சமயத்தில்: ஆனந்தபைரவி

தாலிகட்டு முடிந்தபின்: நீலாம்பரி, ஆனந்த பைரவி, குறிஞ்சி.

## நாதஸ்வர ராகங்கள்!





# வாயில்லாப் பூச்சியள் அதே கண்ணீரோடைதான்...

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எண்டு பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் ஒவ்வொருவருக்கும் பதவிக்கு ஏற்றாற் போலை இருக்குது. யாருடைய "பவர்" கூடவோ அவருக்கு ஒதுக்கீடு கூடவாக இருக்கும்.

அமைச்சர் எண்டால் எல்லா அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கும் இவ்வளவுதான் எண்டு ஒதுக்கீடு இருக்கும். பாராளுமன்ற உறுப்பினரெண்டால் அவர்களுக்கும் அப்பிடித்தான்.

அதை விடுத்து சனங்களுக்கு முன்னாலை போய் "அமைச்சருக்கு இவ்வளவு கோடியாக ஒதுக்கியிருக்குது. எங்களுக்கு இவ்வளவு மில்லியன்தான் ஒதுக்கியிருக்கு" தெண்டு கூட்டமைப்பு எம்.பி.மார் சிலர் புலம்புகிறார்கள்.

நீங்களும் அமைச்சரவைக்குள்ளை வந்தால் உங்களுக்கும் இப்பிடி வருந்தானே! உங்கடை திருச்செல்வத்தை முன்னுதாரணமாகக் கொண்டால் இப்பிடிப் புலம்பத் தேவையில்லையே!

அதைவிடக் கொடுமை என்னவெண்டால் பன்முகப்படுத்தப்பட்ட செலவு ஒதுக்கீடுகளெல்லாம் அரசாங்கத்தாலை மக்களின் பிரதிநிதிகள் தங்கடை பிரதேசத்தை அபிவிருத்தி செய்யிறதுக்காக வழங்கப்படுகிறது எண்டதை வசதியாய் மறைச்சுப் போட்டுத்தான் பல எம்.பி.மாரும், எம்.பி.சி.மாரும் - அதுதான் மாகாணசபை உறுப்பினர்களும் - கதையளக்கினை.

மற்றது இந்த உதவியள் மக்களுக்காய் கிடைக்கிறது எண்டதை வசதியாய் மறந்து தங்கடை பிச்சை எண்ட மாதிரித்தான் வழங்குகினம்.

எப்பிடியெண்டால் அமைச்சர் டக்ளஸோ, சந்திரகுமார் எம்.பி.யோ, உதயன் எம்.பி.யோ எங்கை எங்கை காசை ஒதுக்கினையோ அங்கை பார்த்து கூட்டமைப்பு எம்.பி.மாரும் காசை ஒதுக்குவினை. நீங்கள் பாத்தீங்களெண்டால் ஒரே பாடசாலைக்கோ, சனசமூக நிலையத்துக்கோ ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் ஒரே மாதிரியான உதவியைச் செய்திருப்பினை.

உதாரணத்துக்கு ஒரு சனசமூக நிலையத்துக்கு இரண்டு உறுப்பினர்கள் தொலைக்காட்சிப் பெட்டியையும், வீடியோ பிளேயரையும் ஒதுக்கீடு செய்து விடுவினை. அதை இவையாலை மாத்த ஏலாது. மாத்திறதெண்டால் வழங்கினவையின்ரை சம்மதம் பெற வேணும். பிறகு அதிபர்மாரும், சனசமூக நிலைய ஆட்களும் அதை மாத்தி வாங்கிறதுக்காக படாத பாடு பட்டு பிரதேச செயலகத்துக்கும், ஒதுக்கீடு செய்த உறுப்பினரின் அலுவலகத்துக்கும் அலைஞ்சு திரிய வேணும்.

இதுக்கு எங்கடை அதிபர்மாரும், சனசமூக நிலையக்காரரும் ஒரு காரணம். அவை தங்களுக்கான தேவையளுக்கு தெளிவான ஒரு திட்டத்தை வைச்சிருக்கிறதில்லை. ஒன்றிரண்டு கோரிக்கையளை மட்டும் வைச்சுக் கொண்டு எல்லா எம்.பி.மாரிட்டையும், எம்.பி.சிமாரிட்டையும் ஓடிப் போறது. நாங்கள் உங்களோடைதான் நிக்கிறம். நீங்கள் எங்களுக்கு உதவ வேணும் எண்டு கேக்கிறது. உதவி கிடைச்சாப் பிறகுதான் முழிக்கிறது!

பள்ளிக்கூடங்களுக்கும், சனசமூக நிலையங்களுக்கும் கூட்டமைப்பு, பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்களும் ஒதுக்கீடு செய்த காசுக்குப் பொருட்களை வாங்கி விட்டு அவர்களைக் கொண்டே வைபவ ரீதியாக வழங்க வேண்டும் என வாய்மொழி உத்தரவுகள் விடுக்கப்பட்டிருக்குது.

கிளிநொச்சியிலை பசுபதிப்பிள்ளை ஒதுக்கின காசை வழங்கிறதெண்டால் சிறிதரன்தான் வழங்க வேணும். அதுமாதிரி குலம் அண்ணை அந்தப் பக்கத்திலை எங்கையும் மூச்சு விடுகிறதெண்டாலும் அழையா விருந்தாளியாய் சிறிதரன் நுழைஞ்சு இவருக்கான கௌரவத்தை அரைவாசியாக்கிப் போடுவார்.

கிளிநொச்சியில சந்திரகுமார் எம்.பி காசு ஒதுக்கின இடங்களிலை எல்லாம் சிறியண்ணையும் காசொதுக்கியிருக்குது. அவர் 5இலட்சமெண்டால் அதே இடத்துக்கு சிறிதரன் 3 இலட்சம் ஒதுக்கிறார். ஒதுக்கிப் போட்டு "அவருக்கு 3கோடி ஒதுக்கீடு. எனக்கோ அரைக்கோடிதான் ஒதுக்கியிருக்குது. காசைக் கண்டவுடனை சிலபேர் பல்லிளிச்சுக் கொண்டு சந்திரகுமாருக்குப் பின்னாலை போகினை" எண்டு கூட்டங்களிலை கூப்பாடு போடுறார்.

இதைக் கேட்டுக் கொண்டு சொரணை கெட்ட கூட்டமொண்டு இருக்கிறதுதான் கவலை பாருங்கோ! இப்பிடித்தான் அமைச்சர் டக்ளஸைச் சொல்லி சரவணையும் புலம்புதாம்.

வட புலத்திலை இருக்கிற பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களும், 19 மாகாணசபை உறுப்பினர்களும் அரசாங்கத்தாலை தரப்படுகிற காசை கூடி ஆராய்ந்து எல்லாப் பிரதேசத்துக்கும் கிடைக்கக் கூடியதாய் பகிர்வதற்கு மனங் கொள்ளலாமல்லே?

சரி, ஈ.பி.டி.பிகாரர், சுதந்திரக் கட்சிக்காரர்களோடை கை அலம்பேலாதெண்டால் உங்கடை கூட்டமைப்புக்காரர் ஒண்டு சேர்ந்து உங்களுக்குள்ளை வாற இரட்டை வழங்கலை நிப்பாட்டலாமல்லே?

"அது எப்பிடிச் சாத்தியம்? நாங்கள் தமிழரசுக்கட்சிக்காரர். மிதவாதிகள். கறைபடியாத கைகளை உடையவர்கள். கறை படிஞ்ச ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட்காரரோடை எப்பிடிச் சகவாசம் வைக்கிறதெண்டு" நீங்கள் கேட்டாலும் (அப்பிடித்தானே மக்கள் சந்திப்புகளிலை முழங்குகிறீர்கள்) ஆச்சரியப்படத்தக்கதல்ல.

வாய் வல்லமையுள்ளவன் பிழைக்கிறான். வாயில்லாப் பூச்சியள் அதே கண்ணீரோடைதான்.

# வடமராட்சி மண்ணில் கல்வி சார் பக்தி நெறி கொண்ட கரவெட்டி கிராமம்




கரவெட்டி பிரதேசவைத்தியசாலை




கரவெட்டி வதிரி உடுப்பிட்டி துன்னாலை கரண வாய் என்று பெயர் சொல்லக்கூடிய கிராமங்களை எல்லையாக கொண்டு வடமராட்சியில் ஒரு முக்கிய கிராமீம் ஆகும். கரவெட்டி நெல்லியடி, சம்மந்தர் கடை யடி, கிளவிதோட்டம், யார்க்கரை, அத்துளு, கட்டை வேலி என்றவாறாக சிறு சிறு கிராமக் குடிகளை தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. ஊர் வழக்கில் நெல்லியடியை கரவெட்டி என்று சொல்லுவதில்லை. அதை நெல்லியடி என்றே சொல்லிக்கொள்வார்கள். கேவளை, தூவெளி, நுகவில் வயல் பகுதி, சாமியன் அரசடி, கோவில்சந்தை, போன்றவற்றை எல்லை கோடுகளாக கொண்டு அழகிய கிராமமாக இது விளங்குகிறது இதில் கேவளை சந்தி முன்னர் ஒரு முக்கியமான இடமாக இருந்திருக்கின்றது. ஏனென்றால் சாவகச்சேரி ஊடாக முன்னர் பஸ் ஓடிய காலத்தில் கனகம்புளியடி, கப்பூது, அந்தணதிடல் ஊடாக இந்த சந்திக்குதான் பஸ்கள் வந்து போயினதாம் அது மட்டும் இல்லாமல் யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து செல்கின்ற பஸ்கள் கூட புத்தூர் கப்பூது வழியாக இந்த சந்திக்கு வந்து தான் பருத்தித்துறை செல்லும் அப்படியாக இந்த சந்திக்கு ஒரு முக்கியமான இடமாக விளங்கி யிருந்தது என்றால் மிகையாகாது.

அதுமட்டும் இல்லாமல் இந்த சந்தியை ஆயம் என் றும் ஆயக்கடவை என்றும் ஆயச்சந்தி என்றும் சொல் லுவது வழமை. இது. ஆயக்கடவை என்றும் சொல்லப் படுகிறது. நாட்டின் உள்ளூார் வழிகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி கூடிய கவனம் செலுத்திய ஒல்லாந்தர்கள் இந்த இடத்தில் கிர வெட்(Gravet) நிறுவியிருந்தார்கள். இந்த கிர வெட்(Gravet) தான் பின்னர் திரிவடைந்து கரவெட்டி யானது என்றும் ஒரு சான்று கூறப்படுகிறது. ஆனால் இன்றுவரை சரியான ஒரு காரணம் அறியப்பட்டதாக தெரியவில்லை.எது எப்படியாகயிருப்பினும் இந்த கரவெட்டியின் தெற்கு வாயிலாக இருந்த ஆயக்க டவை அன்றும் இன்றும் ஒரு முக்கியமான தளமாக இருந்து கொண்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால் இதனூடாக பஸ் போக்கு வரத்துக்கள் தற் போது கொஞ்சம் குறைந்து விட்டது. கரவெட்டியில் கோவில்களுக்கு குறைவு இல்லை என்று தான் சொல்ல வேண்டும், வெல் லனிற்பிள்ளையார் கோவில், கிளவிதோட்டம் விநாயகர் கோவில், தச்சந் தோப்பு சிந்தாமணி விநாயகர் கோவில், யார்க்கரை விநா யகர் கோவில், அத்துளு அம்மன் கோவில், நுணு வில் பிள்ளையார் கோவில், சாமியன் அரசடி வைரவர் கோவில் என்று கோவில்களின் பெயர்பட்டியல் சென்றுகொண்டே இருக்கிறது.

விநாயகர் வழிபாடு, மற்றும் அம்மன் வழிபாடு இங்கு முக்கியத்துவம் பெற்று விளங்குவதோடு கிராமிய தெய்வங்கள் வழிபாடும் இங்கு காணப் படுகிறது.கரவெட்டியில் அறிவுசார் விருத்திக்கான பாட சாலைகளுக்கும் குறைவில்லை. கரவெட்டி விக் னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், கட்டை வேலியார்க்கரை விநாய கர் வித்தியாலயம், திரு இருதயக்கல்லூரி ஏன்று பாட சாலைகளும் விளங்குகின்றன. இந்த பாட சாலைகள் கரவெட்டி கிராமத்தில் பல்வேறு அறிவாளிகளை உருவாக்கியுள்ளன. இவ் அறிவிறிவாளிகள் கர வெட்டியின் திறமைசார் பொக்கிசங் களாக விளங்கு வது இங்கு நினைவுகூரவேண்டிய ஒன்று.



நூற்றாண்டு கண்ட பெருமையும் பல கல்விமான்கள் சிந்தனையாளர்கள் நிபுணர் கள் கல்வி கற்ற பழம்பெரும் பாடசாலையுமான கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியால பத்தின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி



கரவெட்டி மைந்தனும் வடமாகாண கல்விப்பணிப் பாளருமான திரு.செல்வராசாவின் சேவை நலன் பாராட்டுவிழா





கரவெட்டி பிரதேச விளையாட்டு வீர வீராங்கனைகள்...







டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அண்மையில் கரவெட்டிப்பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் செயலக வளாகத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைக் காணலாம். (18)

# மல்லாவி ஆயுர்வேத மருத்துவமனையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி கிராமிய ஆயுர் வேத வைத்தியசாலை எவ்வித அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருவதால் இப் பிரதேசத்தில் வாழும் மக்கள் ஆயுர்வேத வைத்திய சேவைகளைப் பெறமுடியாது சிரமங்களுக்குள்ளாவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மல்லாவி பொது வைத்தியசாலை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள நிலையில் உள்ளூர் கிராமங்களைச்சேர்ந்த மக்கள் அவசர வைத்திய தேவைகளுக்காக குறித்த ஆயுர்வேத வைத்தியசாலையை நாடுவதாகவும் எனினும் தற்போது இவ்வைத்தியசாலை விடுதிவசதிகள் குடிநீர் மலசல கூட வசதிகள் ஏதுமற்ற நிலையில் காணப் படுவதால் தாம் வைத்திய சேவையை பெறமுடியாதுள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ் வைத்தியசாலையில் நாளாந்தம் குறிப்பிட்டளவு மக்கள் சிகிச்சை பெற வருகை தருகின்ற நிலையில் வைத்தியசாலையின் அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்வது என்பது அத்தியாவசியமானது எனவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் கூடுதலாக குழந்தைகள் வயோதிபர்கள் சிகிச்சைக்காக வருகை தருவதால் இவர்கள் தங்கி நின்று சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப் படவேண்டும்.

எனவே கிராம மக்களின் வைத்தியதேவையை கருத்தில் கொண்டு இவ்வைத்தியசாலையில் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# திருமறைக்கலாமன்றத்தின் இருநாள் கலை விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடாத்தும் இரு நாள் கலைவிழா எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை 06.45 மணிக்கு, இலக்கம் 238,பிரதான வீதி, யாழப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது. நடனங்கள், நாடகங்கள் உட்பட பல்வேறு வகையான நிகழ்வுகள் அரங்கேறவுள்ள இக் கலைவிழாவின் முதல் நாளில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களுடன், யாழ் திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள் வழங்கும் 'வீரன் தாவீதன்' வடமோடி நாட்டுக்கூத்தும், யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'மதுரையம்பதி' (கண்ணகி) நாட்டிய நாடக மும் ஆகியன வும் இடம்பெறும்.

இரண்டாம் நாளில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனங்களுடன் சிறப்பு நிகழ்வாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'குசேலர்' இசை நாடகம் இடம்பெறும். (48)




## நீலச் சிற்றாடை

ஒரு சமயம் தமிழ் மூதாட்டியாம் ஔவையார் நடந்து சென்று கொண்டிருந்தார். மாலை மயங்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்த நேரம் மழையும் பெய்யத் தொடங்கியது. மழையில் நனைந்தவராக குளிரால் நடுங்கியபடியே! ஔவையார் சென்று கொண்டிருந்தார்.

அவர் எதிரிலே ஒரு சிறு குடிசை தோன்றவே அவர் கால்கள் தாமே அதனை நேர்க்கிச் சென்றன. அந்தக் குடிசையில் இருந்தவர்கள், தம் குடிசையை நோக்கி வருகின்ற மூதாட்டியைக் கண்டனர். அவரை ஏற்று அவருக்கு உதவ ஆவலுடன் எதிர்பார்த்து நின்றனர்.

ஔவையார் குடிசைக்குள் நுழைந்ததும் அந்தப் பெண்கள், தம்முடைய நீலச்சிற்றாடை ஒன்றை அவருக்கு அளித்து, அவருடைய நனைந்த உடைகளை மாற்றச் செய்தனர். அந்த இரு பெண்களின அன்பான உபசரிப்பு ஔவையாரின் உள்ளத்திலே பலவித நினைவுகளை எழச்செய்தன.

ஔவையார் பாரி வள்ளலைக் காணச் சென்றிருந்தார். பாரியின் அளவற்ற தமிழன்பு அவரை ஆட்கொள்ள அங்கே பல நாட்கள் தங்கி விட்டார். ஒருநாள் பாரியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். பாரிக்கு ஔவையாரைப் பிரிய மனமில்லை மேலும் சில நாட்கள் தங்கவைக்க எண்ணினான். தானே குதிரையில் மாறு வேடத்தில் சென்று ஔவையாரிடம் இருந்த கைப்பையைத் திருடிக் கொண்டு வந்தான். "பாரியின்நாட்டில்திருடனா!" என்று வெதும்பி ஔவையார், அவனிடம் அதைக்கண்டிக்க நினைத்து அவனிடத்தில் மீண்டும் வந்தார். பாரி, அவரிடம் தன் செயலைக் கூறி பொறுத்தருள வேண்டினான். அவனுடைய அன்பின் செயல அவரை ஆட்கொண்டது அந்த நிகழ்ச்சியை நினைதது்க் கொண்டார். அந்த அன்பின் சாயல் இந்தப் பெண்களின் செயலிலும் கண்டு உவந்தார்.

அன்பின் வயப்பட்டு உரிமையுடன் செய்யப்படும் செயலகளுக்கு இணையான செயல் எதுவுமில்லை ஏழ்மை நிலையிலும் அன்பினால் செய்யப்படும் காரியங்களை நம்முடைய இலக்கியங்கள் அதிகளவு கூறியிருப்பது அறிவோமாக!

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரியன் நீந்த களைக்கொட்டும் - சேரமான்
வாராயோ வென்நழைத்த வார்த்தையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிடக்கப் பெட்டகம்

இன்றைய இலங்கைப் பிரச்சினை இலங்கையினுடையது மட்டுமல்ல; கிழக்கு, மேற்கு ஆசிய நாடுகளின் பொருளாதார உற்பத்தி உறவுகளுக்குள் மேற்குலகத்தை வணிகரீதியாக எப்படி எதிர்கொள்வது என்ற அச்சத்தையும் தகவமைப்பையும் அது உள்ளடக்கி இருக்கிறது. அழகிய கடற்கரைகள் உள்ள அரபிக்கடல் பகுதியில் தங்கள் பார்வையைச் செலுத்தாமல் அதற்கு மேலே இஸ்லாமிய பயங்கரவாதமும் மத்தியதரைக்கடல் நெருக்கடிகளும் இருப்பதை உணரும் ஐரோப்பியர்கள், விரிந்து பரந்த முக்கடலும் சங்கமிக்கும் வங்காள விரிகுடா, இந்து மகா சமுத்திரம் போன்ற பகுதிகளுக்குக் கீழ் தங்கள் கேளிக்கை நிலையங்களைத் திறக்க ஆர்வத்துடன் முற்படுகின்றனர். மேலும் இப்பகுதியில் நிலவும் ஜனநாயக அரசுகள் வணிக ஒப்பந்தங்களுக்குத் தோதானவை என்பதும்கூட ஒரு வசதிதான்.

எது உண்மை, எது பொய் என்பதையும் எப்போதும் ஆதிக்க சக்திகள்தான் தீர்மானிக்கும் என்ற ஃபூக்கோவின் வாதத்தின் படி, எல்லோருடைய வாயிற்கதவுகளையும் ஏகாதிபத்தியர்கள தட்டிக்கொண்டிருக்கும் வேளையில், நாளை கோரமண்டல் மற்றும் இலங்கைக் கடற்பகுதிகளில் பனிப்பிரதேசங்களில் இருந்து இறங்கி வந்து வெப்பமண்டலக் காதல்களை இனவிருத்திக்காக அனுபவிக்கும் ஐரோப்பியப் பறவைகளை நாம் காணலாம். மல்லாந்தபடி அவை சூரியக்குளியல் நடத்தும் போது, அருகே அவர்களது பன்னாட்டு நிறுவனங்கள் பல பொருட்களை உற்பத்தி செய்து தத்தம் நாடுகளுக்கு கப்பலில் ஏற்றிவிடும் காட்சியையும் அனுபவித்துக் காண்பார்கள்.

பிறகு நீர்க்கண்ணாடிகள் அணிந்து கடலுக்கு அடியில் நீர்த் தாவரங்களையும் பாசிகளையும் கடல்வாழ் உயிரிகளையும் கண்டுகளிக்கும்போது, பல தொல்கதைகளின் எச்சங்களையும் அவற்றின் அரசியல் நனவிலிகளையும் தங்கள் நாட்டு அருங்காட்சியகத்திற்கு கொண்டும்கூட செல்வார்கள்.

**- யவனிகா ஸ்ரீராம்**

"அதோ! அந்த ரஷ்யக் கரடி எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது... எல்லோரும் தாழ்வான பகுதிகளை நோக்கி ஓடுங்கள்...." என்று மேற்கு ஐரோப்பிய நாடுகளில் காமெடி பண்ணிக் கொண்டிருந்த, நேட்டோ இராணுவக் கூட்டமைப்பின் உண்மையான நோக்கம் தற்போது வெளிவர ஆரம்பித்துள்ளது.

பனிப்போர் காலத்தில், ஒவ்வொரு நேட்டோ அங்கத்துவ நாடும் தனது வரவு செலவு திட்டத்தில் (பட்ஜெட்) குறைந்தது 2 சதவீதம் இராணுவ செலவினத்திற்கு ஒதுக்க வேண்டும். அதனால், நேட்டோவின் மிகப் பெரிய ஆயுத உற்பத்தியாளரான அமெரிக்காவுக்கு நிறைய இலாபம் கிடைத்து வந்தது. சோவியத் யூனியன் உடைந்து, பனிப்போரும் முடிந்த பின்னர் ஆயுத விற்பனையும் சரிந்து விட்டது. பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகள், தமது பட்ஜெத்தில் இராணுவ செலவினத்தை கணிசமான அளவு குறைத்துக் கொண்டன.

சமாதான காலத்தில், எதற்காக இராணுவத்திற்கு செலவிட வேண்டும் என்று அந்த நாடுகள் கேட்டதில் நியாயம் இருக்கிறது. பிரிட்டன், போர்த்துக்கல், கிரீஸ் ஆகிய சில நாடுகள் மட்டுமே தொடர்ந்தும் பட்ஜெட்டில் 2 வீதம் பாதுகாப்பிற்கு ஒதுக்கி வந்தன. மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும், பொருளாதார நெருக்கடியை காரணமாகக் காட்டி, இராணுவத்திற்கான செலவை குறைத்து வந்தன.

தற்போது; நேட்டோ நாடுகள் மீண்டும் பாதுகாப்பு செலவினத்தை அதிகரிப்பதற்கு போதுமான காரணங்கள் வந்து விட்டன:

"உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கப் போகிறது!"
"ஈராக்கில் ISIS பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிட வேணடும்!"
"உள்நாட்டில் ஜிகாதியர்கள் அதிகரித்து விட்டார்கள்!"

இந்தப் பிரச்சினைகளில் பெரும் பங்கு, மேற்குலக நாடுகள் தாமாகவே உருவாக்கிக் கொண்டவை. ISIS கூட, அல் கைதா போன்று, அமெரிக்கா பெற்றெடுத்த குழந்தை தான். ஆயினும் என்ன? எமக்கு எதிரி யாரும் இல்லையென்றால், புதிதாக ஒன்றை உருவாக்கிக கொள்வோம். அப்போது தானே பாதுகாப்பு செலவினங்களை அதிகரிக்க முடியும்? அப்போது தானே ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் அதிக இலாபம் சம்பாதிக்க முடியும்?

ஆகையினால் போர் செய்வீர்! அது முதலாளித்துவத்திற்கு நன்மை ப்யக்கும்.

**- கலையரசன்**

காலனியம் பிறிதான மனிதரை மறுக்கிறது. மனிதகுலப் பண்புகள் இத்தகு பிறரிடம் இருக்கக்கூடும் ஏன்பதைக் கடுமையாக மறுப்பதில் உறுதியாக இயங்குகிறது. எனவே, தான் ஆதிக்கம் செலுத்தும் மக்களைத் தொடர்ச்சியாக, "உண்மையில் நான் யார்?" என்ற கேள்வியைத் தமக்குள்ளாகக் கேட்க வைக்கிறது.

**- பிரான்ஸ் ஃபனான்**

### – வறட்சி நிலை தொடர்வதால் –

# காலபோக நெற்செய்கைக்கான தீர்மானங்களை எடுக்கமுடியவில்லை

### – கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கவலை –

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் வறட்சியான சூழ்நிலை நிலவுவதனால் காலபோக நெற்செய்கைக்கான தீர்மானங்கள் எதனையும் எடுக்க முடியாதிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், தெரிவித்தார்.

காலபோக செய்கை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தலில், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது பார்ரிய வறட்சியை எதிர்கொண்டிருக்கின்றோம். பருவமழையை அடுத்து தான் பயிர்ச்செய்கை பற்றியும் அதன் அளவுகள் பற்றியும் தீர்மானிக்க முடியும்.

பருவமழையைத் தொடர்ந்து, காலபோக செய்கைக்கான கூட்டங்கள் உரிய காலத்தில் உரிய முறைப்படி நடைபெறும் அத்துடன், இந்த காலபோக செய்கைக்குரிய விதை நெல் பெற்றுக்கொள்வதில் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கமநலசேவை நிலையங்கள் ஊடாக விதை நெல் தேவையானோரின் பெயர், விபரங்கள் சேகரிக்கப்படும் நிலையில், பதிவுகளை மேற்கொள்வதற்கு விவசாய அமைப்புக்கள் அக்கறை காட்டவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பால்மா விளம்பரங்களுக்கு தற்காலிக தடைவிதிப்பு

(கொழும்பு)

பால்மா தொடர்பான விளம்பரங்களை ஊடகங்களில் பிரசாரம் செய்ய தற்காலிக அடிப்படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால இந்த தகவலை உறுதி செய்துள்ளார்.

மீள அறிவிக்கும் வரையில் ஊடகங்களில் பால்மா தொடர்பான விளம்பரங்களை பிரசாரம் செய்யக்கூடாது.

இது தொடர்பில் ஊடக நிறுவனத் தலைவர்களிடம் எழுத்து மூலம் கோரியுள்ளோம். பால்மா விளம்பரங்களின் போது தேவையற்ற தூண்டுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக விளம்பரங்களுக்கு தடை விதிக்க தீர்மானித்தோம்.

தேவையற்ற தூண்டுதல்களில் ஈடுபடும் சகல பால்மா விளம் பரங்களையும் பட்டியல் படுத்தி ஒழுங்கு செய்யும் வரையில், பால்மா விளம்பரங்களை தற்காலிக அடிப்படையில் ஊடகங்களில் பிரசாரம் செய்ய தடை விதித்துள்ளதாக பாலித மஹிபால அறிவித்துள்ளார்.

## எரிபொருள் நிவாரணங்கள் மீனவர்களுக்கு இல்லை

(கொழும்பு)

எரிபொருள் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதால், மீனவர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவதற்கான தேவை ஏற்படாதென கடற்றொழில் அமைச்சர் ராஜித்த சேனாரத்ன குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும், மீனவர்களுக்கான மாற்று மானியம் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் எரி பொருள் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமென்பதே மீனவர்களின் கோரிக்கையாக இருந்தது தற்போது கோரிக்கை நிறை வேற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட 7500 குடும்பங்களுக்கு நிவாரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்ட 7,500 குடும்பங்களுக்கு, வறட்சி நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட செயலகம் மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிவந்த வறட்சி காரணமாக, 29 ஆயிரத்து 294 குடும்பங்களைச சேர்ந்த 74 ஆயிரத்து 888 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனைவரும் குடிநீருக்கான தட்டுப்பாட்டை எதிர்கொண்டதுடன், இவர்களில் பெரும்பாலானவர்கள் தொழில் ரீதியாக (விவசாயம், மீன்பிடி) பாதிக்கப்பட்டு வாழ்வாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால், இவர்களின் அன்றாட உணவுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலையும் காணப்பட்டது.

இதனையடுத்து, வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட 7,500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு வறட்சி நிவாரணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# முந்திச் செல்ல முற்பட்ட பேருந்தின் பரிதாப நிலை



கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்து ஒன்று மதவாச்சி - இசென்பஸ்கல பகுதியில் நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் சாரதி உள்ளிட்ட காயமடைந்த மூவரும் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கொழும்பில் இருந்து முல்லைத்தீவு பயணித்த பஸ்ஸினை முந்திச் செல்ல முற்பட்ட வேளை தனியார் பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்றச்செய்திகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரி பகுதியில் அனுமதியின்றி காட்டு மரங்களை வெட்டிய சந்தேகநபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

மேற்படி சந்தேகநபர், செவ்வாய்க்கிழமை பூநகரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

◆ ◆ ◆

பளை பகுதியில் 1/2 போத்தல் கசிப்புடன் பிடிக்கப்பட்ட 4 நபர்களுக்கு நீதவான் தலா 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார். மேற்படி நபர்கள் கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, நால்வரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து, நீதவான் அபராதம் விதித்தார்.

◆ ◆ ◆


கிளிநொச்சி, பூநகரி பகுதியில் 7 ஆமைகளை வைத்திருந்த நபருக்கு 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் எம்.ஐ.வகாப்தீன், தீர்ப்பளித்தார்.

அத்துடன், நபரிடமிருந்து மீட்கப்பட்ட ஆமைகளை பாலாவி குளத்தில் விடும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

பூநகரி, பாலாவி குளத்திலிருந்த 7 ஆமைகளைப் பிடித்து தன்வசம் வைத்திருந்த நபரொருவரை நாச்சிக்குடா பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

தொடர்ந்து, இந்நபரையும் அவரிடமிருந்து மீட்கப்பட்ட ஆமைகளையும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் அன்றையதினம் மாலையில் பாரப்படுத்தினர்.

நீதிமன்ற உத்தரவிற்கமைய ஆமைகள் பாலாவி குளத்தில் நேற்று விடப்பட்டுள்ளதாக நாச்சிக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.



## பரமர் சங்கமம்

**பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுதெண்டு சொல்லுவினம். இந்த விளையாட்டு அரசியல் மேல்மட்டங்களில் இப்பெல்லாம் சர்வசாதாரணமா நடந்து கொண்டிருக்கு.**

**வடக்கு மாகாணசபையென்ன கிழக்கு மாகாண சபையையும் உதாரணத்துக்குச் சொல்லலாம். கிழக்கில் முதலமைச்சர் கதிரையைப் புடிக்க இழுபறி வடக்கில் ஆளுநரின் மற்றும் செயலாளரின் கெடுபிடி.**

**இந்த இரண்டாலும் பாதிக்கப்படுகின்ற அப்பாவிப் பொது மக்களின் முன்னேற்றம் வாழ்க்கை என்பனதான் அதோடை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரின் செயற்பாடுகள் முன்னைய தலைவர்கள் புழைவிட்டிட்டார்கள் எண்டவை திரும்பவும் தாங்களும் புழை விட்டிட்டேண்டும் புலம்புகினம்.**

**அப்ப வாக்காளர் பெருமக்கள் அவையளுக்குச் சுண்டெலிகளைப் போலதானை இருக்கினம். முறை அரசியல் நடத்த அதையிதைச் சொல்லிப்போட்டு வெற்றிபெற்றுப் பாராளுமன்றம் போயிட்டும் புழைவிட்டுட்டேண்டு பழுதான இசைத்தட்டாக ஒலித்து கொண்டிருந்தாச் சரியோ?**

**இதுகளைப் போலதான் 'சூரியன்' எப்.எம்.மில 'ஹலோ... ஹலோ... யார் பேசுறீங்க' எண்ட நிகழ்ச்சி காலேலும், மாலேலும் போடுவினம் சூரியனின் டிலான் என்பவர் அறுப்பதற்கு 'வைகைப்புயல் வடிவேலு மிகக்குறைந்த அளவில் சந்தானமும் சேர்ந்து கொள்வினம்.**

**வானொலி நிலைய டிலானுக்குக் கிடைச்ச நம்பரொண்டுத் தொடர்பெடுப்பார். அதுகள் என்ன ஏதோவெண்ட துடிப்பில் கதைக்குங்கள். இவர் வாயை மூடுங்கள் என்பார். வாயை மூடினா எப்புடிக்கதைக்கிறேண்ணுங்கள் அதுக்கிடேல்லை வடிவேலு! பூந்துஹம்மிங் செய்வார். திரும்பவும் வாயை மூடுங்க என்பார் 'ரோங்நம்பர்' எண்டு வைச்சிடுங்கள்.**

**வேறொருவரோடை தொடர்பெடுத்து அவருக்கு வசதியான ஆளாப்பட்டிட்டா 'சுவழ்காச்சிக் குடிப்பமே வரட்டோ என்பார். ஒரு முறை விடலைப்பொடியனொண்டோடை தொடர்பெடுத்தார் அவனுக்கு விளங்கிப் போச்சுது; வாயை மூடர்' எண்டு வாங் கிக் கட்டினார். இன்னொரு முறை வேறொரு விட லைக்குத் தொடர்பை எடுத்தார்.**

**அவ்வேளை முதல் 'வாயைமூடா' எண்டவனும் அங்கை நிண்டிருக்கிறான். அவன் கேட்டிட்டு 'அவர்தான்ரா' கட்பண்ணு எண்டு சொல்வதும் கேட்டது தினமும் இருவேளைகளிலும் அறுப்பதுதான் சூரியன்டிலான் வேலை. ஒருதடவை பெண்மணி ஒருவருடன் தொடர்புகொண்டு - அன்றைக்கு அவவுக்கு பிறந்த நாளென்பதை அறிந்து வைத்து , பிறந்தநாள் வாழ்த்துக் கூறினார்.**

**'ராங்ஸ்' எண்டதும் உங்களுக்குத் வெளிநாட்டில் இருந்து 'ஜிப்ஸ்' ஒண்டு வந்திருக்கெண்டவர் அது ஒரு பிளேன் எண்டும் அதிலேறி உலகம் பூராவும் சுற்றி வரலாமெண்டு அறுத்துக் கொண்டினார். இது அவரின்ர அறுவைக்கு முக்கிய உதவி வடி வேலுதான்**

**'ஆருகதைக்கிறிங்க' எண்டு வடிவேலு தொடங்கி நிகழ்ச்சி முடிவில் எல்லாம் ஜோக்குதான் எண்டிட்டு 'மீண்டும் சந்திப்போம்' எனக்கூறிவிட்டு 'மீண்டுமா என்ற நிறைவுறுவது கேப்ப துக்கு சுவாரஸ்யமாக இருக்கு.**

**தொடர்பை எடுப்பவர்கள் இதை எதிர்பார்க்காமல் அந்தரப்படுகையில் பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவம் போவது ஆக அமைந்து விடுவதுமுண்டு. என்ன நான் சொல்லுறே....**

15. சில மீன் எனப்படுவது
(1) கடற்பசு (2) கடற்குதிரை (3) நீர்யானை (4) திமிங்கலம்

16. உடலாரோக்கியச் செயற்பாடுகளின்போது இறுதியில் செய்யப்படுவது
(1) ஆரம்ப அப்பியாசம் (2) பிராணிகள் போலச்செய்தல்
(3) உபகரணங்களுடன் செய்யும் செற்பாடு (4) உடலைத் தளர்த்தும் செயற்பாடு

17. பின்வரும் பொருள்களிடையே பித்தளைப் பாத்திரங்களைத் துப்பரவாக்கி மினுக்குவதற்கு மிகப்பொருத்தமானது.
(1) பழப்புளி (2) தேங்காய்ப்பூ (3) தேயிலைச் சக்கை (4) சுட்ட உமி

18. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர்
(1) நாம்புவ (2) கரைவலை (3) அத்தாங்கு (4) மடி

19. இலங்கையின் அரச இலட்சனையில் காணப்படும் பகுதிகள்
1) நிறைகலசம், நெற்கதிர், தர்மச்சக்கரம் (2) நிறைகலசம், நெற்கதிர், அரசஇலை
2) சூரியசந்திரர், தர்மச்சக்கரம், சங்கு (4) நெற்கதிர், நிறைகலசம், சங்கு


20. தேசப்படத்தில் மலைகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்
1) நீலம் (2) ஊதா (3) கறுப்பு (4) கபிலம்

21. அபய வாவியை கட்டிவித்த அரசன்
மகாசேனன் (2) பண்டு காபயன் (3) தாதுசேனன் (4) துட்டகைமுனு


22. அயடின் குறைபாட்டால் ஏற்படும் நோய்
(1) தொண்டைக்கரப்பான் (2) நீரிழிவு (3) கண்டமாலை (4) யானைக்கால்

23. பூச்சிகளை பிடித்து உண்ணும் தாவரத் தொகுதி
(1) கெண்டி, கிளிச்சாடி, துரோசீரா, யூற்றிக்குளோரியா
(2) கிளிச்காடி, கெண்டி, மலைவேம்பு, அந்தூரியம்
(3) வாழை, கிளிச்சாடி, யூற்றிக்குளோரியா, தென்னை
(4) துரோசீரா, யூற்றிக்குளோரியா, அந்தூரியம்

24. தெறியோட்டைத் தைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தையல்




25. உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு மூன்று கம்பித்துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் வரிப்படத்தில் வரைந்து காட்டுக.




இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளை வெளிவரும்



## தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1.30 மணி



# கல்வி முரசு

**01. பின்வரும் பாடலை வாசிக்க.**

நல்ல நல்ல மரங்கள்
நாம் வளர்க்கும் மரங்கள்
தின்ன இனிய கனிகள்
தினமும் எமக்குத் தருமே.

நீண்டு வளரும் தென்னை
நிழல் தருமாம் ஆல்பார்
ஆண்டு வளரும் பனையும்
ஆன பலன்கள் தருமாம்.

மாவும் பலாவும் வாழை
யாவும் தரும் முக்கனிகள்
தாவும் செடிகள் சூழ
தளிர்த்து வளரும் மரங்கள்

**இப்பாடலைக் கொண்டு (I) இலிருந்து (X) வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

I) "நல்ல" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..............................

II) "கனிகள்" என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக. ..............................

III). "ஆன பலன்கள் தருமே" என்ற வசனத்தில் அடங்கும் பனையின் பயன் ஒன்று எழுதுக.
..............................

IV) "இனிய கனிகள்" என்பதிலுள்ள அடைமொழியை எழுதுக.
..............................

V) பாடலில் வந்த படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக.
..............................

VI) மா, பலா, வாழை என்பதற்குப் பதிலாக எழுதக் கூடிய ஒரு சொல்லை எழுதுக.
..............................

VII) "நாம் வளர்க்கும் மரங்கள்" என்ற வாக்கியத்தை ஒருமையில் எழுதுக
..............................

VIII) பாடலில் வந்துள்ள பெயரெச்சம் ஒன்று எழுதுக. ..............................................

பாடலில் கூறப்பட்டுள்ள மரங்கள் இரண்டு தருக. ..............................................

பாடலில் வந்துள்ள ஒத்த ஓசைச் சொற்கள் இரண்டு எழுதுக..............................................

**02. சொற்களை ஒழுங்காக்கிக் கருத்துள்ள வாக்கியங்கள் அமைக்குக.**

அவற்றைப் / நினைத்தது / நரி / சாப்பிட / பிடித்தச்

..............................................

உங்களது / வாழும் / தூய்மையாக / வீட்டையும் / நீர்கள் / சூழலையும் / வைத்திருங்கள்.

..............................................

**03. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

..............................................

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

..............................................

**04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான மிகச் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

.............................................. உடையார் இகழ்ச்சி அடையார்.

(முயச்சி, முயல்சி, முயற்சி, முயற்ச்சி)

.............................................. பயன்பாடு வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

(கணினியின், கனனியின், கணிணியின், கனிணியின்)

நான் மரத்தில் ஏறி .............................................. பிடுங்கினேன்.

(இளனி, இளனீர், இளநி, இளநீர்)

**05. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

I want to play ..............................................

(Rice, Pencil, Plant, Netball)

வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.





**06. பின்வரும் கருத்தை தமிழில் எழுதுக.**

I) Be careful .............................................. II) Hands up..............................................


III) Thank you ..............................................

**07. பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**



ஒபகே ச(ப்)பசனீ(ப்)ப கொஹெமத?

..............................................



ஹொ(ந்)தின் இன்னவா?

..............................................

**08 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

08. வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்
(1) கத்தரிக்காய் (2) பாகற்காய் (3) வெண்டிக்காய் (4) வட்டுக்கத்தரிக்காய்

09. ஒருவருடைய காலில் துருப்பிடித்த ஆணி குத்தினால் அவருக்குத் தாமதமின்றிக் குடிக்கக் கொடுப்பதற்கு தகுந்த மருந்து
(1) கொத்தமல்ல (2) மரமஞ்சள் (3) வில்வம்பூ (4)ஆவரம்பூ


10. இலங்கைக்கே உரித்தான பிராணி அல்லாதது
(1) தீக்கோழி (2) இல்ங்கை நாகணவாய் (3) நாய் (4) சிவப்புக்கழுத்துத் தவளை


11. இலங்கைகு மட்டும் உரித்தான தாவரம்
(1) தென்னை (2) பனை (3) கத்தரி (4) தொரணை

12. விமானத்தில் செல்லும் ஒருவருக்கு வானவில்
(1) அரை வட்டமாகத் தெரியும் (2) முழு வட்டமாகத் தெரியும்
(3) முக்கால் வட்டமாகத் தெரியும் (4) தலைகீழாகத் தெரியும்

13. மின்சாரம் தாக்கினால் உடனடியாகச் செய்ய வேண்டியது
(1) தாக்கியவரைத் தொடுதல் (2) நின்ற இடத்தில் அசையாது நின்று கத்துதல்
(3) மின்சாரத்தை உடனடியாகத் துண்டித்தல் (4) செயலற்று செய்வதறியாது நிற்றல்

14. காட்டப்பட்ட நட்சத்திரக் கோலத்தை குறிக்கும் பெயர்
(1) பெருங்கரடி (2) வேட்டைக்காரன்
(3) கார்த்திகை (4) கன்னி





தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தின் 200 ஆவது ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆச்சிரம சுவாமி சு.மோகனதாஸ் சுவாமிகள் உரையாற்றுவதையும், இரா. செல்வவடிவேல் மலரை வெளியீட்டு வைப்பதையும், கௌரவிக்கப்பட்ட எழுத்தாளர்களையும் காணலாம். (48)

# குடிநீர் வழங்கும் திட்டத்தை வேள்ட்விசன் முன்னெடுக்கவேண்டும்

## - வலி.மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

வேள்ட் விசன் நிறுவனம் வட்டுக்கோட்டையிலும் அராலியிலும் பெரும் நிதி உதவி திட்டத்தின் கீழ் பாரிய நீர்த்தாங்கி மற்றும் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டங்களை, கடந்த காலங்களில் முன்னிறுத்தியுள்ளது.

இதற்கு சபையின் சார்பில் நன்றி தெரிவிப்பதுடன் மக்கள் பங்கேற்பு திட்டத்தில் பல கிராமங்களில் இன்று குடிதண்ணீர் தேவை என்பது மிக அவசியமாக உள்ளது.

எனவே இனம் காணப்பட்ட கிராமமக்களுக்கு உடன் நவீன தொழில்நுட்ப தொழில்நுணுக்க முறையின் கீழ் குடிதண்ணீர் வழங்க வேள்ட்விஷன் முன்வர வேண்டும்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தெரிவித்தார்.

வேள்ட்விஷன் நிறுவனத்தினால் குடிதண்ணீர் மற்றும் சுகர்தார திட்டம்( ரிவோஸ் -4) தொடர்பான அபிவிருத்தி கூட்டம் நேற்று வலி.மேற்கு பிரதேச சபையில் இடம்பெற்றது.

சபைத் தவிசாளர் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பால கிருஸ்ணன் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய குடிதண்ணீர் திட்டம் உருவாக்கப்பட்டு பின்னர் அத் நீர் உவராகும் போது அத்திட்டம் கைவிப்படலாகாது.

அதற்கு மாற்றுத்திட்டம், நவீனதொழில்நுட்பம், நவீன தொழில்நுணக்கம் என்பவற்றை பயன்படுத்தி உவராகும் திட்டத்தை - நன்னீர் திட்டமாக மாற்ற வேள்ட் விசன் முன்வரவேண்டும்

இதற்காக வேள்விசன் கூடுதல் நிதியை 2014 - 2015 இல் எமது வலி.மேற்கு பிரதேசத்திற்கு உதவ முன்வரவேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் ஆரம்ப உரையை வலி.மேற்கு திட்ட இணைப்பாளர் அலெக்ஸ் வழங்கினார்.

ரிவாஸ் - 4 திட்டத்தை முகாமையாளர் ஜெ.அன்ரனி வழங்கினார்.

பிரதேச சபை உறுப்பினர்களான ந.பி.ராஜ்குமார், நடனேந்திரன், ஜயலிங்கன், இராசதுரை, கனகராசன் ஆகியோரும் பிரதேசமட்ட குடிதண்ணீர் திட்டத்தை முன்வைத்தனர்.

இதேவேளை வழுக்கையாறு ஊடாக அராலி கடலுக்கு செல்லும் பாரிய மழை நீரை தடுத்து நிறுத்தவும் வேள்ட் விசன் முன்வரவேண்டும் என சபை உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர். (92)

# ஆசிரிய ஆலோசகர்கள் 42 பேர் நியமனம்

(யாழ்.நிருபர்)

வடமத்திய மாகாணத்திலுள்ள எட்டு கல்வி வலயங்களிலும் கடமை புரிந்த 42 ஆசிரிய ஆலோசகர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் சிங்கள மொழிமூலம் 37 ஆசிரிய ஆலோசகர்களும் தமிழ மொழிமூலம் 05 ஆசிரிய ஆலோசகர்களும் அடங்குவர்.

இவர்கள் சேவைமூப்பு, திறமை அடிப்படையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு வடமத்திய மாகாண கல்வி அமைச்சர் கே.எச். நந்த சேனவினால் அண்மையில் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. (10)

# யாழ். மத்திய கல்லூரியின் மாகாண நிலை பட்டிமன்றச்சமர்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர மாணவர்களின் வாசிப்பு, பேச்சு, தர்க்கித்தல் திறனை வளாக்கும் பொருட்டு அமரர் கணபதி இராசதுரை நினைவு நிதிய அனுசரணையுடன் யாழ். மத்திய கல்லூரி தமிழ்ச்சங்கம் வருடா வருடம் நிகழ்த்தி வரும் 'பட்டிமன்றச்சமர்' எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முன்னர் பங்குபற்ற விரும்பும் வடக்கு மாகாணப் பாடசாலைகள் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

இதன்படி பொறுப்பாசிரியர் - 0775478159, தலைவர் - 0776446156; உபதலைவர் - 0754353370 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொள்ள முடியும்.

மேலும் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு சுற்றுக்கேடயம், வெற்றிக்கேடயம் 1, வெற்றிக்கேடயம் 2, வெற்றிக்கேடயம் 3 சிறந்த விவா திக்கான கேடயம் போன்றன வழங்கப்படும்.

பங்கேற்கும் சகலருக்கும் மாகாணநிலை சான்றிதழ் என்பன வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறும் வெளி மாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும் எனவும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

# சேதமடைந்துள்ள வீதி புனரமைக்க கோரிக்கை



கரவெட்டி கவுந்தில் வீதி பல காலமாக திருத்தப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் இதனூடாக பயணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வீதி குண்டும் குழியமாக மிக மோசமாக சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் இதனூடாக பாடசாலை மாணவர்கள், அரசஉத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலர் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

எனவே சேதமடைந்துள்ள வீதியை திருத்த கரவெட்டி பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# "காலநதியின் கற்குழிவு" சிறுகதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அவையின் ஏற்பாட்டில் காலநதியின் கற்குழிவு யாழ்ப்பாண வாழ் 40 எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு நூல்வெளியீடும் அவை வருகையாளர்களின் கௌரவிப்பும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

சாகித்திய ரத்னா தெணியான் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை அதிபர் கி.கணேசன் தலைமையுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் அ.பௌநந்தி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து விரிவுரையாளர்களான பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கன், ச.லலீசன், இ.இராஜேஸ்கண்ணன், கே.ஆர்.கமலநாதன், க.திலகநாதன், ஈ.குமரன், த.கலாமணி, திருமதி ம.கோசலை, எழுத்தாளர்களான கே.ஆர்.டேவிட், பெரிய ஐங்கரன் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்ந்து காலநதியின் கற்குழிவு நூல் அறிமுகவுரையை இ.சு.முரளிதரன், வெளியீட்டுரையை கொழும்புத்துறை புனித வளனார் குருமடம் அதிபர் அருட்திரு செ.அன்புராசா, நயப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# தங்கூசி வலையை பயன்படுத்தி மீன்பிடித்த நால்வர் கைது




(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைக்கடற் பரப்பிலும் நாவாந்துறைக் கடற்பரப்பிலும் நேற்று தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்திய கடற்றொழிலாளர் நால்வர் யாழ்.கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டு அவர்களிடம் இருந்த தங்கூசி வலைத் தொகுதியும் மீன்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவர்களையும் தங்கூசி வலைகளையும் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் கடற்றொழில் நீரியல்வள அமைச்சினால் இத்தகைய வலைகள் பயன்படுத்தப்படும் போது கடல் வளங்கள் அழிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டு கடற்றொழிலாளர்கள் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வாறு மற்று மொரு தொகுதி தங்கூசி வலைகள் வேலணைப் பகுதியில் அண்மையில் கடற்றொழில் நீரியல வளத்திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பின்னர் எரித்து அழிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# சேது சமுத்திர திட்டம் முன்னெடுப்பு
# இராமர் பாலத்திற்கு பாதிப்பு இல்லை

## மத்திய அமைச்சர் நிதின் கட்காரி தெரிவிப்பு







தமிழகத்தின் இராமேஸ்வரத்திற்கும், இலங்கையின் மன்னார் தீவுகளுக்கும் இடையே உள்ள இராமர் பாலத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும் என இந்தியாவின் மத்திய அமைசசர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

இராமர் பாலம் எனப்படுகின்ற சுண்ணாம்புக் கற்களால் ஆன ஆழமற்ற மேடுகளை தனுஷ்கோடி அருகே அகலப்படுத்தி கப்பல் போக்குவரத்திற்கு ஏற்றதாக மாற்றும் முயற்சியை இந்திய அரசாங்கம் பல வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்டிருந்தது.

எனினும், இராமாயண புராணக் கதையுடன் தொடர்புடைய குறித்த பகுதியில் சேது சமுத்திரத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு பல்வேறு தரப்பினரும் வெளியிட்டுவந்த எதிர்ப்புகளால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமற் போனது. இந்த நிலையில் இந்தியாவின் மத்திய கப்பல், தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரி, டில்லியில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோது சேது சமுத்திரத் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இராமர் பாலத்திற்கு எவ்வித மான இடையூறும் இல்லாமல் மாற்றுவழியில் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளதுடன் இதற்காக பல மாற்றுவழிகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# சீனப்பிரதமருக்கு குஜராத்தில் வரவேற்பு



மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இந்தியா சென்ற சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்க்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிரதமர் நரேந்திர மோடியின் 64 ஆவது பிறந்த நாள் மிகுந்த உற்சாகமாக கொண்டாடப்பட்டபோது பிரதமர் தன் சொந்த மண்ணுக்கு வந்த சீனாவின், முதல் ஜனாதிபதியை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளார்.

குஜராத்தில் உள்ள மகாத்மா காந்தியடிகள் ஆரம்பித்த சபர்மதி ஆசிரமத்திற்கு சீன ஜனாதிபதியை அழைத்துச் சென்ற மோடி. அமைதியான அந்த ஆசிரமத்தின் ஒவ்வொரு அறைகளையும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் விளக்கிக் கூறினார்.

# போகோஹராம் தீவிரவாதிகள் நைஜீரியாவில் சுட்டுக்கொலை



நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் அவர்கள் மீது நைஜிரியப் படையினர் தீவிர தாக்குதலை நடாத்த ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி அந்நாட்டின் வடகிழக்கு நகரமான மெயிடுகுரியில் தீவிரவாதிகள் மீது இராணுவத்தினர் நடாத்திய தீவிர தாக்குதலில் பலர் பலியாகியுள்ளதாகவும் இத்தாக்குதலில் தீவிரவாதிகளின் வாகனங்கள், விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த தீவிரவாதிகள் மெய்டுகுரியில் இருந்து 35 கி.மீ தொலைவில் உள்ள கோண்டுகா நகரை நோக்கி தப்பி ஓடியுள்ளதாகவும் அவர்களை இராணுவத்தினர் பின் தொடர்ந்து வருவதாகவும் பிரிகேடியர் ஜெனரல் ஒலாஜிடே ஒலாலியே தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களில் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் தீவிரவாதிகள் இம்முறை பலத்த இழப்பை சந்தித்துள்ளதாக இராணுவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். கோண்டுகா அருகே உள்ள காவுரி கிராமத்தில் வசிக்கும் பொதுமக்களில் ஒருவர் தீவிரவாதிகள் பலத்த இழப்பை சந்தித்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார்.

# எபோலா நோயை தடுக்கும் முகமாக 6.4 மில்லியன் டொலர்கள் அன்பளிப்பு



மேற்கு ஆபிரிக்காவில் வெகு வேகமாக பரவிவரும் எபோலா வைரஸினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்து வருகின்றனர். எனவே இந்த உயிரிழப்புக்களை தடுக்கும் பொருட்டு அவுஸ ரேலியா 6.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கத் தீர்மானித்துள்ளதாக நேற்று அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷொப தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தொற்று நோய்களினால் 2400 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர், எனவே இவற்றினை நாட்டினுள் அனுமதிக்க கூடாது எனவும் இவற்றிற்கு எதிராக போராட வேண்டுமெனவும் அவர் தெரிவிததார்.


பாதிக்கப்பட்ட நாடான சியாராலியோனில் மருத்துவ வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அதற்கான உதவித்தொகையாக பிரித்தானியாவிலிருந்து 02 மில்லியன் அமெரிக்க டொலர்களைப்பெற வேண்டுகோள் விடுககப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜூலி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அடுத்த 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களும் உலக சுகாதார நிறுவனத்தின் திரண்ட பிராந்திய நிதியத்தில் சேரும். இத்தொகையானது மருத்துவ வசதிகளுக்காகவும் மருந்துகளின் கொள்வனவுக்காகவும் பயன்படுத்தப்படும்.

மேலும் லைபீரியா, சியாராலியோன், மற்றும் கினியா ஆகிய பிரதேசங்களில் சுகாதார நிலைமையானது மிகக் கடுமையான நிலையிலுள்ளதாகவும், எனவே மனிதாபிமான அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து உதவ வேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இவ்வாண்டின் இறுதிக்குள் எபோலா வைரஸ் தாக்கத்தினால் 20,000இற்கும் மேற்பட்டோர் பாதிப்படையலாம் என உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# நெதர்லாந்தில் கடும் மூடுபனி 150 கார்கள் தொடர் மோதல்




நெதர்லாந்து நாட்டில் கடும் மூடுபனி காரணமாக நிகழ்ந்த வீதி விபத்தில் 150 கார்கள் தொடர் மோதலில் சிக்கின. இந்த மோதலில் இருவர் பலியானார்கள். .மேலும் 26 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆம்ஸ்டர்டாமில் இருந்து தென்மேற்காக உள்ள கோயஸ் மற்றும் மிடில்பர்க் நகரங்களுக்கிடையே உள்ள ஏ.58 பிரதான வீதியில் இவ்விபத்து நடைபெற்றுள்ளதாகவும் இதில் இருவர் பலியானதாகவும் ஜீலேண்ட காவல் துறை செய்தித் தொடர்பாளரான எஸ்தர் பூட் தெரிவித்தார்.

மேலும் 26 பேர் காயமடைந்துள்ளதாகவும், அதில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடும் மூடுபனி காரணமாக நெடுஞ் சாலையின் இரு பக்கங்களிலும் கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக கொண்டதாக அம்மாகாண பாதுகாப்பு செய்தித்தொடர்ப்பாளரான ஹேன்ஸ் ஹப்ரெக்ட்செ கூறினார்.

இவ்விபத்தில் சிக்கியவர்களை காப்பாற்ற 50 அம்புலன்ஸ்கள் அனுப்பப்பட்டு படுகாயமடைந்தவர்கள் மட்டும் சிகிச்சைக்காக ரோட்டர் டாமில் உள்ள மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மற்றவர்களுக்கு உள்ளூரிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

# பிலிப்பைன்ஸில் எரிமலை வெடிப்பு ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்



பிலிப்பைன்ஸில் கடந்த பல வாரங்களாக அச்சத்தை ஏற்படுத்தி வந்த மேயான் எரிமலை வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளதாகவும் அதில் இருந்து வெளியேறும் தீப்பிழம்புகள் (லாவா) சுமார் 6 கி.மீ. தூரம் வரை பரவும் என்பதால் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இதுவரை 8 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் சுமார் 50 ஆயிரம் பேரை ஒரு வாரத்துக்குள் எரிமலை சுற்றுவட்டாரப் பகுதியில் இருந்து வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இந்தப் பகுதிகளில் ஏராளமான சுற்றுலாத் தலங்கள் உள்ளதாகவும் அங்கு உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2006 ஆம் ஆண்டு இந்த எரிமலை வெடித்துச் சிதறியது. ஆனால் அப்போது உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் அதே ஆண்டு டிசம்பரில் கடும் புயல் வீசியபோது இதிலிருந்து தொடர்ந்து சீறிக் கொண்டிருந்த தீப்பிழம்புகள் பொங்கிச் சிதறியதில் 1000 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# குருதியில் குளிர்காய்ந்த மாவை இனஅழிப்பு குறித்து பேசலாமா?

## விந்தன் கேள்விக்கணை



தமிழ் பேசும் மக்கள் குருதியில் நனைந்தழிந்த கொடுந்துயரில் குளிர்காய்ந்து அதில் அரசியல் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த மாவை சேனாதிராஜா இன்று இன அழிப்பு என்று நீலிக் கண்ணீர் வடிப்பது மக்களையும் உலகத்தையும் ஏமாற்றவே என ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் தெரிவித்துள்ளார்.

வறிய மக்களது வாழ்வாதாரத்தையும் அவர்களது இதர தேவைகளையும் மேம்படுத்திக் கொள்வதற்காக நல்லூர்ப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அழிவு யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலம்பெயர் நாடுகளில் பதுங்கியிருந்தார்கள். கூட்டங்களை நடத்தினார்கள். அங்குள்ள மக்கள் கேள்விகள் கேட்டார்கள். எல்லா நாடுகளிலும் உரிமைப்போராட்டம் நடந்து விடுதலையும் கிடைத்து விட்டது. எமக்கு மட்டும் ஏன் இதுவரை கிடைக்கவில்லை?.... இவ்வாறு புலம்பெயர் மக்கள் கேட்ட போது எமது மக்கள் இன்னமும் அழிந்தது காணாது என்றும், எந்தளவுக்கு இன்னும் அழிவுகள் அதிகமாகின்றதோ அந்தளவுக்கு விடுதலையும் விரைவாகக் கிடைக்கும் என்றும் தமிழ்த தேசியக் கூட்டமைப்பினர் பதிலளித்திருந்தனர். தாமும் தத்தமது குடும்பங்களும் உலக நாடுகளில் உல்லாசமாக வாழ்ந்து கொண்டு அப்பாவி மக்கள் மட்டும் செத்தழிய வேண்டும் என்று விரும்பியவர்களே இவர்கள். இந்த வக்கிரபுத்தி படைத்த ஈனப்பிறவிகளா இன அழிப்புப் பற்றி பேசுகிறார்கள்?

யுத்த காலத்தில் விடிந்தால் வெடிகுண்டுச்சத்தம் கேட்குமோ என்ற ஏக்கத்தில் அப்பாவி மக்கள் விழித்துக் கொள்வார்கள், ஆனாலும் விடிந்ததும் எத்தனை பிணங்கள் விழுகின்றதோ அத்தனை பிணங்களிலும் ஏறிநின்று ஆனந்தக்கூத்தாடியவர்கள் தமிழ்த தேசியக் கூட்டமைப்பினர். இப்போது மனிதப் பிணங்கள் விழவில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆழ்ந்த கவலை. அந்தக் கவலை மாவைக்கும் உண்டு.

ஆகவேதான் அழிவுகள் இன்று இல்லை என்றாலும் அப்பாவி மக்கள் அவலங்களையாவது சுமக்கவேண்டும் என்று மாவை சேனாதிராசா விரும்புகின்றார்.

தமது உறுப்பினர்களை தூண்டிவிட்டு மக்களின் அவலங்களை தீர்க்கும் எமது வாழ்வெழுச்சித்திட்டங்கள் மீது அவதூறுகளை பொழிந்து வருகின்றார். வாழ்வெழுச்சித்திட்டங்களால் மக்கள் மகிழ்ச்சியடைந்து விடுவார்கள் என்ற அச்சம் அவர்களில் குடிகொண்டிருக்கிறது.

மாவையின் அகிம்சை கோழிகள் கொக்கரித்து பொழுது விடியப்போவதில்லை. உரிமையை பெற்றுக்கொள்ள மதிநுட்ப சிந்தனையை பயன்படுத்த வேண்டிய காலமிது. ஆனாலும் அகிம்சை போராட்டம் நடத்துவதற்கு காலக்கெடு விதித்துள்ளார் மாவை. இவர் நடத்தப்போகும் அகிம்சைப் போரில் உலகநாடுகளில் உல்லாச படகோட்டும் இவரது பிள்ளைகள் வந்து முதலில் முகம் காட்டட்டும் அதற்குப் பிறகு அடுத்தவர் பிள்ளைகளை போராட்டக் களம் நோக்கி அழைக்கட்டும்.

77இல் வெறும் தேர்தல் வெற்றிக்காக தனி நாட்டுக் கோரிக்கையை வைத்து அடுத்தவர் பிள்ளைகளை உசுப்பேற்றி வீதிகளுக்கு அழைத்தார்கள். தாம் மட்டும் குடும்பங்களோடு தப்பிச்சென்று தமிழ் நாட்டில் தனி வீடு பெற்றுக்கொண்டார்கள். மீண்டும் மக்களை அழியக் கொடுத்துவிட்டு தப்பியோடவா மாவை நினைக்கின்றார்.

உரிமைப் போராட்டத்தில் மாவையரின் குடும்பத்தில் ஒருவராவது பலியாகி இருக்கின்றார்களா? இதற்கு பதில் சொல்லிவிட்டு மாவையர் குடும்பத்தோடு வந்து களத்திலிறங்கட்டும். மா இலை தோரணம் கட்டி வரவேற்போம் என்றும் தெரிவித்தார்.

# நினைவு தினநிகழ்வுகள் புதிய நேர அட்டவணை

ராஜனி திரானகம நினைவுதின குழுவின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நினைவுதின நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. என்று மேற்படி நினைவு தின குழுவினர் அறிவித்துள்ளனர். புதிய நிகழ்ச்சி நிரல்கள் பின்வருமாறு,

ராஜனி திரானகம நினைவு கூட்டம் நாளை 20ஆம் திகதி முற்பகல் 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை ட்ரிம்மர் மண்டபம், 9 வேம்படி றோட்,யாழ்ப்பாணம், (மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அரு காமையில்) ராஜனி திரானகம நினைவு கலாசார நிகழ்வு நாளை பிற்பகல்,2.30 - 4.30மணிவரை வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணத்திலும். ராஜனி திரானகம நினைவு கருத்தரங்கு: ஒரு ஜனநாயக மற்றும் நீதியான சமூகம்" நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல், 9.00மணிமுதல் மதியம் 1.30 மணிவரை யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபம் ஆகிய இடங்களிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# சமர்ப்பிக்கப்படவுள்ள பட்ஜெட் 3 வருட இலக்கை கொண்டது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

மூன்று வருடங்களை இலக்காகக்கொண்டே அடுத்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அமைச்சில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒரு வருடத்துக்கான நிதி ஒதுக்கப்பட்டாலும் மூன்று வருடத் திட்டங்களை இலக்காகக் கொள்ளப்படும்.

ஏனெனில் அடுத்த வருடத்தில் நாம் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ள குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களை ஒரு வருடத்துக்குள் பூர்த்தி செய்துவிட முடியாது. அடுத்தடுத்து வரும் வருடங்களுக்கும் அதற்கான நிதி ஒதுக்கப்பட வேண்டும். இதே போன்றுதான் ஏனைய திட்டங்களும்.

அடுத்த வரவு செலவுத்திட்டம் தொடர்பில் திணைக்கள அதிகாரிகள் 13 அமைச்சுக்களுடனும் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி மக்களின் அத்தியவசியத் தேவைகள் தொடர்பில் 3 வருடத் திட்டம் தயாரித்துள்ளனர்.

### காணாமற்...

மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பாக சாட்சிப் பதிவு மேற்கொள்ளப்படும். இந்த சாட்சியப்பதிவின் போது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்குழு உடனிருப்பர் அத்துடன் சர்வதேச நிபுணர்குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் 30 கிராம சேவையாளர் பிரிவிற்கும் செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் முழங்காவிலிலும், 29,30 ஆம் திகதிகளில் பூநகரியிலும் இந்த சாட்சியப்பதிவுகள் மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

### மின்கட்டணங்களை...

பில் அவர் மேலும் கூறுகையில்,

எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுவதுபோன்று மின் கட்டணக் குறைப்புக்கும் ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதலாவது கட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்துவைத்தபோது, இதன் மூன்றாம் கட்டம் நிறைவடையும் போது நாம் மின் கட்டணங்களைக் குறைப்போம் என அன்றே பொது மக்களுக்கு வாக்குறுதியளித்தார். அந்த வாக்குறுதி இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சம்பூரிலும் நிலக்கரி அனல் மின் நிலையத்தை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனவேதான் பொது மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வகையில் மின் கட்டணத்தை மேலும் குறைக்க முடிவுசெய்துள்ளோம் என்றும் அமைச்சர் கூறினார்.

### நாட்டிற்கு...

நாட்டில், ஊழல் மோசடிகளை ஒழிக்காமலேயே அரசாங்கம் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் போகிறது.

ஜனாதிபதித் தேர்தல் 2017 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட வேண்டும். அதனை 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகள் நாட்டுக்கு நன்மையான ஆண்டுகளாக இருக்கப் போவதில்லை என்பது இதன் மூலம் தெளிவாகியுள்ளது.

இன்றைய அரசாங்கத்திற்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமாயின், நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமாயின், சட்டத்தின் கீழ் ஆட்சி நடக்கும் நாட்டை கட்டியெழுப்ப முடியுமாயின், ஊழல், மோசடிகள், வீண் விரயங்களை நிறுத்த முடியுமாயின் அவற்றை நிறுத்தி விட்டே ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்லும்.

அப்படி செய்யாது இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே தேர்தலுக்கு செல்வது அடுத்த இரண்டு ஆண்டுகள் மக்களுக்கு நன்மையான ஆண்டுகளாக இருக்கப் போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது.

இன்றைய அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமும், நிறைவேற்று அதிகாரமும், மாகாண சபைகளின் அதிகாரமும் இருக்கும் போது அவற்றை செய்ததன் மூலம் இது மேலும் உறுதியாகியுள்ளது.

இதனால், எதிர்கால நிலைமைகள் குறித்து தீர்மானங்களை எடுப்பதற்காக மல்வத்து மாநாயக்கரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

எவ்வாறாயினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் சிறந்த வாழ்க்கையை வென்றெடுக்கும் இயலுமை எமக்கு கிடைக்கும் என நம்புகிறோம்.

பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான எண்ணம் இருந்தது. எனினும், ஐக்கிய தேசியக் கட்சி குழுவாத செயற்பாடுகள் காரணமாக பொதுவேட்பாளர் என்ற எண்ணத்தை முற்றாக கைவிட்டு விட்டோம்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. அது இந்த அரசாங்கத்தின் மறுபக்கமே அன்றி பாரிய மாற்றங்கள் இல்லை எனவும் அனுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

### 642ஏக்கர்...

ஒப்படைத்தார்.

இந்த விவசாய நிலங்கள், எதிர்வரும் 25ஆம் திகதியே ஒப்படைப்பதாக இருந்த போதும், இராணுவத்தினர் அந்த நிலங்களை முன்னதாகவே விவசாயிகளிடம் கையளித்துள்ளனர்.

இதனையடுத்து, நேற்றுக்காலை 10 மணியளவில், பூசையை மேற்கொண்ட விவசாயிகள், நிலத்தை பண்படுத்தி சிறு நிலப்பரப்பில் நெல் பயிரிடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, முழு விவசாய நிலங்களையும் பண்படுத்தி விவசாய செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

இதேவேளை, இந்த நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக, மானிய உரம் மற்றும் விதை நெல் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உறுதியளித்தார்.

இராணுவத்தினர் வசமிருந்த கேப்பாப்பிலவு, வாவெட்டி குளம், இயன்கன்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள 67 விவசாயிகளுக்கு சொந்தமான 320 ஏக்கர் விவசாய காணியும், விமானப் படையின் கட்டுப்பாட்டின் கீழிருந்த இயன்கன்குளம் பகுதியிலுள்ள 32 விவசாயிகளுக்கு சொந்தமான 82 ஏக்கர் வயல் நிலமும், வாவெட்டிக்குளம் பகுதியிலுள்ள 34 விவசாயிகளுக்கு சொந்தமான 240 ஏக்கர் வயல் நிலமும் விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிலங்களை சுற்றியிருந்த முட்கம்பி வேலிகள் அகற்றப்பட்டு, விவசாயம் செய்யக் கூடிய விதத்தில் இராணுவத்தினரால் இந்த நிலங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

### இலக்கை...

எமது இலக்கை நோக்கி நகர வேண்டியது அவசியமாகும்.

சில நாட்களுக்கு முன்னர் ஒரு நாட்டின் தூதுவர் என்னுடன் தனியாகப் பேசினார். உள்நாட்டு பிரச்சினைகளில் உங்கள் தலையீடுகள் இருப்பதை இலங்கை அரசு விரும்பவில்லை என எனக்கு அவர் குறிப்பிட்டார்.

இன்று எமக்கு போடப்படும் மாலைகளும் பொன்னாடைகளும் எம்மை மேலும் போராட்வேண்டும் என்றே தூண்டுகின்றன. போராடுவதற்கான ஒரு தூண்டுதலாகவே அவை அமைகின்றன.

எமது சிறு பிள்ளைகள் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு செல்லும் நிலைமைக்கு செல்ல விடாது நாம் இந்தப் போராட்டத்தை நடத்தி அவர்களை நல்ல முறையில் வாழ வழி செய்ய வேண்டியது அவசியமாகும்

எமக்கு கிடைக்கப்போகும் தமிழீழம் எமது மண்ணில் தான் கிடைக்க வேண்டும். இதனை விடுத்து எங்கள் மொழியை இழந்து மண்ணை இழந்து வேறு எங்கும் செல்ல முடியாது.

எமது மண்ணை இராணுவம் ஆளுகின்றது. இராணுவத்தினரின் உல்லாச வாழ்க்கைக்காக இதனை நாம் அங்கீகரிக்க முடியாது. இதனை தடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

நாங்கள் தோற்றுப்போனவர்கள் அல்ல. இன்று நாங்கள் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். அகிம்சைப் போராட்டம் எப்போதும் தோற்றுப்போனதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# புகையிரதக் கடவை வேண்டும்; இணுவிலில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

இணுவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள புகையிரதக் கடவையை மூடி புகையிரதப்பாதை அமைக்க மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கையை கண்டித்து நேற்று பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் புகையிரதப் பாதை பணிகளை மேற் கொள்ள விடாது பாதையில் அமர்ந்து மறியல் போராட் டத்திலும் ஈடுபட்டார்கள். புகையிரதப் பாதை அமைப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட பாதையின் வீதிக் கடவைக் குறியீடுகள் அமைக்கப்பட்டு அது சம்பந்தமான அடையாளங்களும் இடப்பட்டிருந்தன. தற்போது திடீரென குறிப்பிட்ட வீதிக் கடவை அடையாளங்களை அகற்றியதுடன் இந்த வீதிக் கடவையை இல்லாது செய்து புகையிரதப் பாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் பலரும் புகையிரதப் பாதையில் அமர்ந்து தொடர்ந்து பணிகளை செய்யவிடாது தடை செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் தமக்கு குறிப்பிட்ட வீதிக் கடவையை அமைத்து தரவேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

# 12 அகதிகளின் படகுகளை திருப்பி அனுப்பியது ஆஸி

அவுஸ்ரேலியாவை நோக்கிச் சென்ற 12 அகதிகளின் படகுகள் இந்த வருடத்தில் மாத்திரம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன் மூலம் இலங்கையர்கள் உள்ளிட்ட ஆயிரத்து 600 பேர் அவுஸ்ரேலியாவிற்குள் நுழைவது தடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது. படகுகள் மூலம் செல்கின்ற அகதிகளை விசாரணைகள் இன்றி அதே படகில் திருப்பி அனுப்பும் திட்டத்தை பிரதமர் ரொனி அப்போட் தலைமையிலான அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆரம்பித்து வைத்தது. இந்த திட்டம் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகிய போதும், அதனை அவுஸ்ரேலியா இரகசியமாகப் பேணி வந்தது.

இந்த நிலையில் படகுகள் திருப்பி அனுப்பப்பட்டமை தொடர்பில் இதுவரையில் மௌனம் காத்து வந்த அவுஸ்ரேலிய குடிவரவுத்துறை அமைச்சர், 12 படகுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தினார்.

இதன்படி கடந்த ஒரு வருட காலப்பகுதியில் அகதிகளுக்கு எந்த பாதிப்புகளும் ஏற்படாதவாறு, 12 படகுகள் வழிமறைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோத பொருள் பரிமாற்றம் தடுக்கும் நடவடிக்கை வெற்றி

## சுங்கப்பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருதல் மற்றும் நாட்டிலிருந்து எடுத்துச் செல்லவதை தடுப்பதற்கு சுங்கப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக தங்கம், சிகரெட், போதைப்பொருள், மருந்துப் பொருட்கள் மற்றும் வல்லப்பட்டை என்பன சுங்கப் பிரிவினரால் அதிகளவில் கைப்பற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் போதைப் பொருளின் பெறுமதி 102 கோடி ரூபாவிற்கு அதிகமென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டிலிருந்து கொண்டுசெல்வதற்கு முற்பட்ட 20 கோடி ரூபா பெறுமதியான 20 கிலோர் கிராம் தங்கமும் இந்தக் காலப்பகுதியில் கைப்பற்றப பட்டதாக சுங்கப் பிரிவு குறிப் பிட்டுள்ளது.

அதனைத்தவிர நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட 35 கிலோகிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி சுட்டிக்காட்டினார்.

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட அல்லது நாட்டிலிருந்து எடுத்துச்செல்லப் படவிருந்த இந்தப் பொருட்கள் கட்டுநாயக்க வீமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் கைப்பற்றப் பட்டதாக சுங்கப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்

# முதுகல்விமாணி கற்கை விண்ணப்பிக்க வாய்ப்பு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தினால் நடத்தப்படும் முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் கல்விமாணிப் பட்டம் திறமைச்சித்தியுடன் கூடிய பட்டமேற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற்கல்வி டிப்ளோமாவில் உரிய தகைமையைப் பூர்த்தி செய்தவர்கள் இக்கற்கை நகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.


இந்நிகழ்ச்சித்திட்டமானது கொழும்பு பிராந்திய நிலையத்தில் மட்டுமே நடத்தப்படும். விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும 7 ஆம் திகதி வரை பிறவுண் வதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


**Nalin Information Technologies (PVT) Ltd.**

Original Cartidge with Genuine Warranty

விசேட விலைகளில்.......

HP 93A Toner 28100/=
HP 85A Toner 8950/=
HP 35A Tpner 7750/=
HP 16A Toner 23300/=
HP 12A Toner 9150/=
HP 29A Toner 24500/=
HP 678 Black & Colour 1250/=



(C/3447) * Con. Apply

Nalin Information Technologies (PVT) Ltd.
No 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
Phone- 0212221121/1166 0777667975


# மறைத்து வைக்கப்பட்டிருந்த ஜொனி மிதிவெடிகள் மீட்பு



(வவுனியா)

வவுனியா ஓமந்தை கருங்காலிக் குளம் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 12 மிதிவெடிகள் படையினரால் நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டு செயலிழக்கவைக்கப்பட்டன. ஓமந்தையில் உள்ள கருங்காலிக் குளம் பகுதியில் உள்ள காணி ஒன்றை தோட்டச் செய்கைக்குக் கையளிப்பதற்காக அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று நேற்று முன்தினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தது. காணியைத் துப்புரவு செய்துகொண்டிக்கும்போது பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளை அவதானித்தனர். உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பொலிஸார் அப்பகுதிக்கு நேற்று பாதுகாப்பு வழங்கினர்.

நேற்று அப்பகுதிக்கு வந்த விசேட அதிரடிப்படையினர் அந்த மிதிவெடிகளை மீட்டு அவற்றை வெடிக்கவைத்தனர். வெடிக்கவைக்கப்பட்ட மிதிவெடிகள் விடுதலைப் புலிகளின் "ஜொனி" ரக மிதிவெடி என்று தெரிவிக்கப்பட்டது. (70)


**Original HP Supplies**
Authorized Partner

Awarded to

Nalin Information Technologies (Pvt) Ltd.

This is to certify that
Nalin Information Technologies (Pvt) Ltd.
is an authorized HP Original Cartridge Store

01/09/2014 Issued Date
01/09/2015 Valid Till

Ang Sue San
General Manager
Hewlett-Packard Singapore (Sales) Pte. Ltd.
Printing & Personal Systems Group
Asia Emerging Countries



(C/3516)

Log in: http://www8.hp.com/lk/si/default.html facebook/nalin it


...வரியில் அமைந்துள்ள ... 2014 செப்ரெம்பர் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.